இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்
PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2020. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 149 | இதழ் : 09 | திகதி : 29.06.2025 | விலை : 50.00

## திருத்தூதர்களின் சான்று வாழ்வால் உரமிடப்பட்டு, உருவாக்கப்பட்ட திருஅவை

– திருத்தந்தை 14ஆம் லியோ



கடவுளின் மகிமையானது அவரது நண்பர்களிடத்தில் சுடர்விடுகின்றது என்றும், திருத்தூதர்கள் மற்றும் மறைசாட்சிகளின் இரத்தத் தால் உரமிடப்பட்டு அவர்களின் சான்று வாழ்வால் திருஅவை உருவாக்கப்பட்டது என்றும் கூறினார் திருத்தந்தை பதினான்காம் லியோ.

உரோமைத் திருஅவையின் மிகப்பெரும் பெருவிழாவாகிய திருத்தூதர்களான புனித பேதுரு மற்றும் பவுல், திரு அவைக்காக இரத்தம் சிந்திய ஏனைய மறை சாட்சிகளின் தியாக வாழ்வை நினைவு கூர்கி ன்றோம் என்றும், அவர்கள் சிந்திய இரத்தத்தால் உரமிடப்பட்டு சான்று வாழ்வால் திருஅவை உருவாக்கப்பட்டது என்றும் கூறினார் திருத்தந்தை பதினான்காம் லியோ. கிறிஸ்துவிற்காகவும் நற்செய்திக்காகவும் தங்களது வாழ்வை இழக்கும் மக்கள் நமது காலத்திலும் உள்ளனர் என்று கூறிய திருத்தந்தை அவர்கள், இவ்வாறு சிந்தப்பட்ட அவர்களது இரத்தமானது கிறிஸ்தவக் கோட்பாடு மற்றும் கிறிஸ்தவ தலத்திருஅவைகளுக்கிடையே உள்ள கண்ணுக்குத் தெரியாத ஆழமான ஒற்று மையை வெளிப்படுத்துகின்றது என்றும் கூறினார்.

திருத்தந்தையின் பணியானது ஒற்றுமைக்கான பணி என்றும், அப்பணி உரோமைத் திரு அவையின் புனிதர்களான பேதுரு மற்றும் பவுலின் இரத்தத்தால் அனைத்து திருஅவைகளுக்கும் இடையில் ஒற்றுமையை ஊக்குவிப்பதற்கு உறுதிபூண்டுள்ளது என்பதையும் உறுதிப்படுத்த விரும்புவதாக எடுத்துரைத்தார். பாறை என்னும் கிறிஸ்துவின் பெயரைத் தனது பெயராகக் கொண்ட பேதுரு, “கட்டுவோர் புறக்கணித்த கல்லே கட்டடத்துக்கு மூலைக்கல் ஆயிற்று” (மத் 21:42) என்பது போல தூய பேதுரு பெருங்கோவில் வத்திக்கான் வளாகம், தூய பவுல் பெருங்கோவில் போன்றவை தொடர்ந்து மாற்றத்திற்கு உட்பட்டு வந்ததை எடுத்துரைக்கின்றன. இயேசுவைப் பின்பற்றுபவர்கள் பேறுபெற்றோரின் பாதையில் அதாவது, தூய ஆவியாரின் எளிமை, கனிவு, இரக்கம், கருணை, நீதிக்கான பசி மற்றும் தாகம், அமைதிக்காக உழைத்தல், எதிர்ப்பையும் துன்புறுத்தலையும் எதிர் கொள்ளும் பேரின்பப் பாதையில் நடக்கிறார்கள் என்றும் எடுத்துரைத்தார் திருத்தந்தை.

## மனிதப் புதைகுழிகளுடன் தொடர்புடையவர்கள் நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டும் – யாழ். மாவட்ட சர்வமத பேரவை



இலங்கையில் நீடித்த அமைதி மற்றும் பொறுப்புக்கூறலை அடைவதிலுள்ள சவால்களை மேற்கொள்ள சர்வதேச பொறிமுறையூடான தீர்வே அவசியமென்பதை வலியுறுத்தியும், அதனை ஐக்கிய நாடுகள் சபை பரிசீலித்து 60வது அமர்வில் ஒரு புதிய தீர்மானத்திற்கு ஐ.நாவின் அவசர தலையீட்டை கோரியும் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் திரு. வோல்கர் டர்க் அவர்களுக்கு குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளை பாதுகாப்பதற்கான இயக்கம் வேண்டுகோள் கடிதமொன்றை சமர்ப்பித்துள்ளது. இலங்கையில் நடந்த தமிழர்களின் இனப்படுகொலைக்கான தீர்வு, போர்க்குற்றங்கள் மற்றும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களை விசாரிக்க சர்வதேச பொறிமுறையை நிறுவுதல், வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களுக்கான நீதி, செம்மணி, கொக்குதொடுவாய், மன்னார் சதொச, திருக்கேதீஸ்வரம் போன்ற பாரிய மனித புதைகுழிகளுக்கு பொறுப்புக்கூறல், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்களின் நிலங்களை சட்டவிரோதமாக கையகப்படுத்தும் நில அபகரிப்பை தடுத்தல், அரசியல் கைதிகளாக நீண்டநாள் தடுப்புக்காவலில் ப.2

## கிறிஸ்துவின் திருஉடல் திரு இரத்தப் பெருவிழா பல இடங்களிலும் நற்கருணைப் பேரணி



கிறிஸ்துவின் திருஉடல் திரு இரத்தப் பெருவிழாவை முன்னிட்டு, கடந்த 22ஆம் திகதி யாழ். மறைமாவட்டத்தின் பல இடங்களிலும் நற்கருணைப்பவனிகள் சிறப்பான முறையில் முன்னெடுக்கப்பட்டிருந்தன. யாழ். மறைக்கோட்டத்தில் மறைக்கோட்ட முதல்வர் அருட்தந்தை ஜெறோ செல்வநாயகம் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற நற்கருணைப் பவனி யாழ். புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் ஆரம்பமாகி குருநகர் புனித யாகப்பர் ஆலயம் ஊடாக யாழ். புனித மரியன்னை பேராலயத்தை சென்றடைந்தது. இப்பேரணி சென்ற ப.2

## யாழ். ஆயர் புதிய இராணுவ கட்டளைத்தளபதி சந்திப்பு



இலங்கை இராணுவ யாழ்ப்பாண புதிய கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் ரசிக குமார அவர்கள் யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களைக் சந்தித்து கலந்துரையாடியுள்ளார். இச்சந்திப்பு கடந்த 25ஆம் திகதி புதன்கிழமை யாழ். மறைமாவட்ட ஆயர் இல்லத்தில் நடைபெற்றது.

## யுவானியார் இளையோரின் கலை மாலை



சுண்டுக்குளி புனித யுவானியார் ஆலய திருவிழாவினையொட்டி இளைஞர் மன்றத்தின் “கலைமாலை” நிகழ்வு கடந்த 29. 06.205 அன்று ஆலய முன்றலில் நடை பெற்றது. நிகழ்வில் ‘வழி’ என்ற பெயர் தாங்கிய இளையோரின் ஆக்கங்கள் அடங்கிய சஞ்சிகை ஒன்று வெளியிடப்பட்டதுடன் நடனங்கள், பட்டிமன்றம், நாடகம் போன்ற கலை நிகழ்வுகளும் நடைபெற்றன. பங்குத்தந்தை R.H. சகாயநாயகம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் யாழ் மறை மாவட்ட குருமுதல்வர் ப.யோ.ஜெபரெட்ணம் அடிகள் முதன்மை விருந்தினராக கலந்துகொண்டார். மறைக் கோட்டமுதல்வர் அருட்பணி ஜெரோ செல்வநாயகம் அடிகள் சிறப்பு விருதினராகவும் இளையோர் ஆணைக்ககுழு இயக்கநர் அருட்திரு குருஸ் அடிகளும் சுண்டிக்குளி கிராம சேவையாளர் திரு.ரமணப் பிரகாஸ் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர்

## யாழ். பேராலயத்தில் தூய ஆவியார் ஆராதனை



உயிர்த்த ஆண்டவர் சமூகத்தினரின் ஏற்பாட்டில் யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் முன்னெடுக்கப்பட்ட புதுப்பித்தலின் தூய ஆவியார் ஆராதனை 27ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்றது. பங்குத்தந்தை அருட்தந்தை ஜெறோ செல்வநாயகம் அவர்களின் உதவியுடன் உயிர்த்த ஆண்டவர் சமூக நிறுவுனர் திரு. லலித் பெரேரா அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் இறைவார்த்தைப் பகிர்வு, நற்கருணை ஆராதனை, புகழ்ச்சி ஆராதனை, குணமாக்கல் வழிபாடு என்பவற்றுடன் யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அவர்களின் தலைமையில் திருப்பலியும் இடம்பெற்றன. இந்நிகழ்வில் ஏராளமான இறைமக்கள் பக்தியுடன் பங்குபற்றினர்.



# “ஒப்புரவு! புனிதத்திற்கான திறவுகோல்”

## பாப்பரசர் தினம் 29.06.2025

2025ம் ஆண்டு ஆனி மாதம் 29ம் திகதி பரிசுத்த பாப்பரசர் தினத்தை முன்னிட்டு, “ஒப்புரவு! புனிதத்திற்கான திறவுகோல்” என்ற கருப்பொருளுக்கு அமைய, நாம் அனைவரும் ஒரு தாய் பிள்ளைகளைப் போல் ஒற்றுமையாகவும், சமாதானமாகவும் இவ் யூபிலி ஆண்டை நோக்கி பயணிப்போம்.

”நீங்கள் உங்கள் உடைகளைக் கிழித்துக்-கொள்ள வேண்டாம், இதயத்தைக் கிழித்துக் கொண்டு உங்கள் கடவுளாகிய ஆண்டவரிடம் திரும்பி வாருங்கள்” (யோவேல் 2:13) என்ற இறைவார்த்தை எமக்கு எடுத்துரைப்பது பாவங்களுக்காக மனம் வருத்துதல். “இந்த உலகத்தின் போக்கின்படி ஒழுகாதீர்கள். மாறாக, உங்கள் உள்ளம் புதுப்பிக்கப் பெற்று மாற்றம் அடைவ-தாக!” (உரோமையர் 12:2) எம் வாழ்வில் மன்னிப்பு, கீழ்ப்படிவு,பொறுமை, தாழ்மை ஆகிய நற்பண்புக-ளும்,பொறாமை, பொய், மற்றவர்களின் கருத்துக்கு “மதிப்பளிக்காமை போன்ற தீயபண்புகளுடன் நாம் இவ் உலகில் வாழ்கின்றோம். எனவே நாம் எம் மனநிலையினை புரிந்துக் கொண்டு இயேசுவுக்கு விசுவாசமாகவும், அன்புடனும் வாழ்வை முன்னெடுத்துச் செல்ல பழகி கொள்ள வேண்டும்.

ஒப்புரவு அருட்சாதனம் எம் வாழ்வை மாற்றும் ஆயுதமாக அமைகின்றது. இயேசு நம் பாவங்களுக்காக சிலுவையில் மரித்தார், பாவிகளையும் மன்னித்தார். அவ்வாரே நாமும் ஒருவரை ஒருவர் மன்னித்து வாழ வேண்டும். இயேசு சக்கேயுவிடம் நீ தவறுகளை திருத்தி புதிய வாழ்வு வாழ வேண்டும் என்று நான் விருப்பு- கிறேன் என்று கூறினார். சக்கேயுவின் பதில் நான் செய்த தவறுக்காக மனம் வருந்-தி மன்னிப்பு கேட்கிறேன். எம்மையும் அழைகிறார் இயேசு பாவங்களை திருத்தி வாழ்வதற்கு ஆகவே நாமும் பாவங்களுக்காக மனவ- ருந்தி இயேசுவிடம் மன்னிப்பு பெற்றுக் கொள்வோம்.

எம் வாழ்வில் கோபம் என்ற குணம் எம்மை நோயாளராக மாற்றுகிறது, காரணம் கோபத்தினால் நாம் பலரை காயப்படுத்துவதுடன், அதேபோன்று நாமும் மன அழுத்ததிற்கு உட்படுகின்றோம். எனவே இயேசு எம்மை அழைக்கின்றார் ”ஒருவருக்கொருவர் பாவங்-களை அறிக்கை செய்து கொள்ளுங்கள், ஒருவர் மற்ற-வருக்காக இறைவனிடம் வேண்டுங்கள், அப்போது குணமடைவீர்கள்.” (யாக்கோபு 5:16) இரக்கம், அன்பு, கீழ்படிவு, விசுவாசம், நம்பிக்கை, உதவி செய்யும் மனபாண்பு போன்ற நற்குணத்தின் மூலம் இவ் உலக மக்களின் தேவைகாகவும், ஏழை மக்களுக்கு உதவி செய்யும் நே-ாக்குடனும் மறைபணியாற்றிய புனித அன்னை தெரேசா அவர்களின் வாழ்வை போன்று நாமும் இவ் உலகத்தில் மற்றவர்களுக்கு உதவி செய்ய முன்வரவேண்டும்.

செபம், இறைவார்த்தை, நற்கருணை, இறைவேண்டல் எம்பவற்றில் நாம் நம் வாழ்வை பாவத்தில் இருந்து பாதுகாத்துக் கொள்ள முடியும். இவ் அனைத்துமே எம் வாழ்கையை மாற்றும் பாதையாகவும், ஒளியாகவும் இருக்கின்றது. ஒரு சிறை கைதியை கூட மனமாற்றம் செய்யும் ஆயுதமாகவும் செபம், இறைவார்த்தை காணப்படுகின்றது. எனவே நாம் இறை விசுவாசம், அன்பு என்பவற்றுடன் புனித திறவு-கோலை கொண்டு பயணத்தை தொடர்வோம்.

புதிய திருத்தந்தை 14 லியோ அவர்கள் இறைவனால் தேர்தெடுக்கப்பட்டமைக்காக இறைவனுக்கு நன்றி கூறுவோம். அவரின் மேய்ப்புப்பணியில் மக்களை வழிநடத்த தூய ஆவியின் வல்லமை கிடைக்க வேண்டி திருத்-தந்தைக்காக செபிக்கும் படி கேட்டுகொள்கிறேன். ”நம் தந்தை நம்மிடம் எத்துணை அன்பு கொண்டுள்ளார் என்று பாருங்கள்.” நாம் அவரை போன்று அன்புள்ளவராக இருக்கின்றோமா, அவரது அன்புக்கு எல்லையே இல்லை அதனால் தான் எமது பாவங்களுக்காக அவர் தன் உயிரை-யே சிலுவை பலியாக்கினார். ஆனால் நாமோ இன்னும் பாவியாகவே வாழ்வின்றோம் எனவே நாம் இவ் இறைவார்த்தையை எம் வாழ்வில் பின்பற்றி வாழ்வோம் ”கிறிஸ்து நமக்காகத் தம் உயிரைக் கொடுத்தார். இதனால் அன்பு இன்னதென்று அறிந்து கொண்டோம். ஆகவே, நாமும் நம் சகோதரர் சகோதரிகளுக்காக உயிரைக் கொடுத்தார். இதனால் அன்பு இன்னதென்று அறிந்து கொண்டோம். ஆகவே நாமும் நம் சகோதரர் சகோதரிகளுக்காக உயிரைக் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். (1யோவான் 3:16) அவ்வாறே “மன்னிப்பு என்பது நம்மிலும் நம் சமூகங்களிலும் ஒரு வரவேற்கத்தக்க பாதுகாப்பான எதிர்காலத்தைத் தயார் செய்வதாகும்”எனவே நாம் ஒற்றுமையாகவும், சமாதானமாகவும்விண்ணரசை நோக்கிப் பயணத்தை ஆரம்பிப்போம்.

## கிறிஸ்துவின் திரு உடல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆலயங்களில் சிறப்பு நற்கருணை வழிபாடுகள் இடம் பெற்றதுடன் யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அவர்களால் நற்கருணை ஆசீரும் வழங்கப்பட்டது. அத்துடன் உருத்திரபுரம் பங்கில் பங்குத்தந்தை அருட்-தந்தை ஜோன் கனீசியஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற பவனி புனித பற்றிமா அன்னை ஆலயத்தில் ஆரம்பமாகி ஜெயந்திநகர் புனித அந்தோனியார் ஆலயத்தின் ஊடாக கனகபுரம் புனித யூதா ஆலயத்தை சென்றடைந்து அங்கு இடம்பெற்ற நற்கருணை ஆசீருடன் நிறைவடைந்தது. இளவாலைப் பங்கில் பங்குத்தந்தை அருட்-தந்தை எரிக் றொஷான் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற நற்கருணைப் பவனி புனித அன்னாள் ஆலயத்-தில் ஆரம்பமாகி புனித யூதாததேயு ஆலயத்தை சென்றடைந்து அங்கு இடம்பெற்ற நற்கருணை ஆசீருடன் நிறைவடைந்தது. இப்பேரணிகளில் ஏராளமான மக்கள் பக்-தியுடன் பங்குபற்றியிருந்தனர்.

## மனித புதைகுழி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளவர்களை விடுவிப்பதற்கான பொறிமுறையை உருவாக்குதல், பயங்கரவாதத் தடுப்புச் சட்டம், நிகழ்நிலை காப்பு சட்டம், பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளை சட்டம் போன்ற கடுமையான சட்டங்களை ரத்து செய்தல், பாலியல் வன்முறை மற்றும் குற்றவாளிகளுக்கான நீதி தொடர்பான பிரச்சினைகளுக்கான தீர்வு, அரச ஆதரவுடன் கூடிய சிங்கள பௌத்த மதப் பிரச்சாரத்தை தவிர்த்தல் போன்ற கோரிக்கைகளை முன்னிறுத்தி சிரேஸ்ட சட்டத்தரணிகளான திரு. கே.எஸ் ரட்ணவேல், திரு. வி. புவிதரன், திரு. ந.காண்டீ-பன், திரு. ம. யூட் டினேஸ், திரு. வி. எஸ். நிரஞ்சன், திருமதி சுகந்தி ராஜகுலேந்திரா, செல்வி றனிதா ஞானறாஜ் உள்ளடங்கலாக வடக்கு கிழக்கு மாகாணங்களை சேர்ந்த பல அருட்தந்தையர்கள், குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளை பாதுகாப்பதற்கான இயக்க அங்கத்தவர்கள் கையொப்பமிடப்பட்ட இக்கடிதத்தை சமர்ப்பித்துள்ளனர். அத்துடன் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் தமிழ் மக்களால் நீண்டகாலமாக கோரப்பட்ட அரசியல் சுயாட்சியைப் பகிர்ந்தளிப்பது குறித்த தனது உறுதிமொழிகளை நிறைவேற்ற தேவையான அரசியலமைப்பு நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் ஒரு அரசியல் தீர்வைத் தொடர அரசாங்கம் தவறியதை மீண்டும் வலியுறுத்திய குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளை பாதுகாப்பதற்கான இயக்கம் அத்தகைய அதிகாரப் பகிர்வு உண்மையான நல்லிணக்கத்திற்கும், அனைத்து மக்களும் மனித உரிமைகளை முழுமையாக அனுபவிப்பதற்கும் ஒருங்கிணைந்ததாகும் என்பதையும் இவ்விண்ணப்ப கடிதத்தில் கோடிட்டுகாட்டியுள்ளனர்.

## “எங்கள் செபமாலைப் பூங்கா”



பண்டத்தரிப்புப் பற்றிமா பதியின் மகிமை
பக்திமயமாகப் பக்தர்களிடம் மேலும் சிறப்புற
சித்தம் கொண்ட இறைவனின் வழிநடத்தலில்
உத்தமமாய் உதித்தது எங்கள் செபமாலைப்
பூங்கா

இராசமுருக்கின் பாரம்பரியம் தழுவியே அருகினில்
இராசதானி போல் அழகுற அம்சமாய் அமைந்த
சிலை வடிவான சித்திரங்களாய்க் காட்சிதரும்
கலைநயமான காவியமாம் எங்கள்
செபமாலைப் பூங்கா

மகிழ்ச்சியில் ஐந்து நிலைகளும் அத்துடன்
ஒளியினில் நை-து நிலைகளும் தொடர்ந்து
துயரம் மகிமையென ஐந்தைந்து
நிலைகளுமாக
இருபதும் நிரையாய்வரும்
எங்கள் செபமாலைப் பூங்கா

அமைதியான அமைவிடம் ஆவலைத்
தூண்டிட
நிறைவான நிம்மதியைச் செபமாலை தந்திட
குழுவாகக் குடும்பமாகக் கூடியே செபித்திட
ஒற்றுமை வளர்க்கும்
எங்கள் செபமாலைப் பூங்கா

செபமாலைப் பூங்காவின் இருபது பூக்களும்
செபித்திடத் தூண்டியே இறையாசி தந்திடும்
ஓர்முறை இவ்விடம் வந்துதான் பாருங்கள்
பார்போற்றும் அன்னையின் ஆசிகள்
பெறுவீர்கள்

“பண்டைநகர் நாயகன்“

## கரித்தாஸ் கியூடெக் யாழ்ப்பாணம்
## தவக்கால நிதி சேகரிப்புகள் - பங்குகள் - 2025

| இல. | பங்குகள் | தொகை |
|---|---|---|
| 1. | குருநகர் | 166,730 00 |
| 2. | பேராலயம், யாழ்ப்பாணம். | 130,000.00 |
| 3. | பண்டியந்தாழ்வு | 7.000.00 |
| 4. | பாசையூர் | 100,000.00 |
| 5. | அடைக்கல அன்னை ஆலயம், யாழ்ப்பாணம் | 40,950.00 |
| 6. | புனித யுவானியார் ஆலயம், யாழ்ப்பாணம் | 15,400.00 |
| 7. | புனித திரேசா ஆலயம், யாழ்ப்பாணம். | 13,500.00 |
| 8. | புனித பெனடிக்ற் ஆலயம், நல்லூர் | 21,500.00 |
| 9. | கொழும்புத்துறை | 32.000.00 |
| 10. | அஞ்சனந்தாழ்வு | 4,950.00 |
| 11 . | நாவாந்துறை | 78,220.00 |
| 12. | கோப்பாய் | 17,500.00 |
| 13. | கொய்யாத்தோட்டம் | 7,100.00 |
| 14. | மணியந்தோட்டம் | 12,000.00 |
| 15. | பண்டத்தரிப்பு | 12,080.00 |
| 16. | ஆனைக்கோட்டை | 22,450.00 |
| 17. | உரும்பிராய் | 25,000.00 |
| 18. | இளவாலை | 99,250.00 |
| 19. | மாரீசன்கூடல் | 25,000.00 |
| 20. | புனித யாகப்பர் ஆலயம், இளவாலை | 10,000.00 |
| 21. | மானிப்பாய் | 50,000.00 |
| 22. | பெரியவிளான், இளவாலை | 38,500.00 |
| 23 | சில்லாலை | 69,100.00 |
| 24. | சுன்னாகம் | 10,000.00 |
| 25. | ஊறணி, பலாலி | 11,300.00 |
| 26. | குளமங்கால், மல்லாகம். | 75,810.00 |
| 27. | மல்வம்,உடுவில் | 15,000.00 |
| 28. | நவாலி | 14,700.00 |
| 29. | மாதகல் | - |
| 30. | மணற்காடு | 8,000.00 |
| 31. | பளை | 19,000.00 |
| 32. | சக்கோட்டை | 8,000.00 |
| 33. | கரவெட்டி | 25,000.00 |
| 34. | மிருசுவில் | 70,000.00 |
| 35. | ஒட்டகப்புலம் | 23.000.00 |
| 36. | பருத்தித்துறை | 29.860 00 |
| 37. | அச்சுவேலி | 10.500.00 |
| 38. | சாவகச்சேரி | - |
| 39. | செம்பியன்பற்று | - |
| 40. | கட்டைக்காடு | 20,000.00 |
| 41. | புங்குடுதீவு | 5,000.00 |
| 42. | நாரந்தனை | 12,200.00 |
| 43. | ஊர்காவற்றுறை | 10,000.00 |
| 44. | மண்டைதீவு | 10,720.00 |
| 45. | அல்லைப்பிட்டி | 13.520.00 |
| 40. | எழுவதீவு | 12,000.00 |
| 47. | நெடுந்தீவு | 15,000.00 |
| 48. | கரம்பன் | - |
| 49. | சாட்டி | - |
| 50. | உருத்திரபுரம் | 4,000.00 |
| 51. | கிளிநொச்சி | 12,000.00 |
| 52. | பரந்தன் | 22,250.00 |
| 53. | மல்லாவி | 5,650.00 |
| 54. | முழங்காவில் | 6,200.00 |
| 55. | வட்டக்கட்சி | - |
| 56. | பூநகரி | - |
| 57. | வலைப்பாடு | 25,000.00 |
| 58. | குமுழமுனை | - |
| 59. | அக்கராயன். | - |
| 60. | தர்மபுரம். | 5,500.00 |
| 61. | புதுக்குடியிருப்பு | 45,000.00 |
| 62. | கூழாமுறிப்பு | 15,000.00 |
| 63. | முல்லைத்தீவு | 36,440.00 |
| 64. | முகத்துவாரம் | 10,000.00 |
| 65. | சிலாவத்தை | 10,000.00 |
| 66. | அளம்பில் | 35,000.00 |
| 67. | கொக்கிளாய் | 7,110.00 |
| 68. | இரணைப்பாலை | - |
| 69. | மாங்குளம் | - |
| 70. | உடையார்கட்டு | - |
| | மொத்தம் | 1,655,990.00 |

# நம்பிக்கை பிறந்துள்ளது



(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

டொனல்ட் நம் மதில்கள் கட்ட முனைகின்றார். புதிய திருத்தந்தை பதின்நான்காம் லியோ அவர்கள் தனது கன்னியுரையிலும், தன்னைத் தெரிந்து கொண்ட கருதினார்மார்களுடன் நிறை வேற்றிய கூட்டுத் திருப்பலியின் பொழுது தனது முதல் மறை உரையிலும் போப் பிரான்சிஸ் அவர்களை மேற்கோள்காட்டி "பாலங்கள் அமைப் போம்" என்று கூறிப் போப் பிரான்சிஸ் அவர்கள் பாதையில் நடப்பேன் என்று சொல்லாமல் சொன் னார். ஆயினும் இரண்டாவது போப் பிரான்சிஸ் ஆக மாற மாட்டேன் என்பதையும் தெளிவாக்கினார். எனது வழி, தனி வழி.

**பதின்நான்காம் லியோ**

பதின்நான்காம் லியோ என்ற பெயரையே தனது கத்தோலிக்க திரு-அவையின் தலைமைத்துவப் பெயராக எடுத்துக் கொண்டார். இது பலருக்கு ஓர் அதிசயமாக இருந்தது. போப் பிரான்சிஸ் அவர்களுக்கு மிக வேண்டியவராக வத்திக்கானுக்கு அழைக்கப்பட்டு ஒரு பாரிய பொறுப்பை ஏற்றவராக, அவருடைய சீர் திருத்தங்களுக்கு ஆதரவாக இருந்தும் அவரது பெயரை எடுக்கவில்லை. தன்னை ஆயராக நியமித்த இரண்டாவது ஜோன் போல் அவர்களுடைய பெயரையும் எடுக்கவில்லை. (இதில் எனக்கோர் நிம்மதி. பதினாறாவது பெனடிக்ற் அவர்களுடைய சிவந்த மேலங்கியையும் வேலைப்பாடுகள் நிறைந்த அகன்ற ஸ்ரோவையும் அணிந்து முதன் முறையாக வத்திக்கான் பல்கனியில் தோற்றமளித்தாலும் அவருடைய பெயரையும் எடுக்கவில்லை. (இதில் எனக்கு மகிழ்ச்சி) ஆகவே, இவர் திரு அவையைப் பின்னிழுக்க மாட்டார் என்று என்னைப்போன்ற பலர் நிம்மதி அடைந்தார்கள்.

மிகவும் பின்சென்று, இன்றைக்கு 134 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த பதின்மூன்றாம் லியோவிற்கு சென்றுள்ளார். இந்தத் திருத்தந்தைதான் றேனும் நோவானும் என்ற சுற்றுமடலை எழுதி திருஅவையிலும், ஏன் உலகிலும் பெரும் புரட்சி செய்தார். றேனும் நோவானும் என்ற சொற்றொடரைத் தமிழில் கூறுவதானால் "புரட்சிகரமான மாற்றங்கள்" எனலாம். முதலாளி வர்க்கத்திற்கு மாறாக பாட்டாளி மக்களின் குரலாக அந்தச் சுற்றுமடல் அமைந்தது.

**அடக்கப்பட்டோரின் குரல்**

இன்றைய எங்கள் திருத்தந்தை, தென்னமெரிக்காவில் உள்ள பெரு என்ற நாட்டில் பணிபுரிந்தவர். அங்குள்ள வறிய மக்களோடு மக்களாக வாழ்ந்து, அவர்கள் உரிமைக் குரலாக வாழ்ந்தார். மனித உரிமைகள் பறிக்கப்பட்டபொழுது அவர்களுக்காக ஓங்கிக் குரல் கொடுத்தவர். இவருடைய இந்தப் பணிக்குத் தூண்டுதலாகவும், ஒரு வழிகாட்டலாகவும் பதின் மூன்றாம் லியோ அவர்களின் சுற்றுமடல் அமைந்திருக்க வேண்டும்.

இப்பொழுது உலகளாவிய ரீதியில் கத்தோலிக்க மக்களின் தலைவரானதும், அவர் பதின்மூன்றாவதுலியோவின் "றேனும் நோவானும்" அவர் கண் முன்னே வந்திருக்கும் அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு, உரிமைகள் மறுக்கப்பட்டு வாழும் மக்களின் குரலாகத் தனது குரல் எழவேண்டுமென்று அவர் உறுதி கொண்டிருக்கலாம். இன்றைய உலகில் ஒரு பதின் நான்காம் லியோதான் தேவைப்படும் என்றும் அவர் சிந்தித்திருக்கலாம். தனது தலைமைத் துவம் எவ்வழி செல்லும் என்று உலகிற்குத் தெரிவித்துள்ளார்.

**வட அமெரிக்கன்தான்**

வட அமெரிக்காவில் உள்ள, சொயி என்ற மாநிலத்தின் தலைநகரான சிக்காகோவின் தென்பகுதியில் பிறந்து வளர்ந்தவர் எங்கள் திருத்தந்தை. நியூயோர்க், பொஸ்ரன், சன் பிரான்சிஸ்கோ, லொஸ் ஆஞ்செலஸ், சியூஸ்ரன், வாஷிங்ரன் போன்ற பெரும் நகரங்களைப் போலவே சிக்காகோவும் ஒரு பெரிய நகரம். இங்குதான் வட அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஒபாமாவும் பிறந்து வளர்ந்தவர். அண்மைக் காலத்தில் வட அமெரிக்காவில் தோன்றிய ஜனாதிபதிகளுள் மிகச் சிறந்த ஒரு ஜனாதிபதி ஒபாமா. பேச்சாற்றல் உள்ளவர். இன்றும் அவரது பேச்சுக்கு மதிப்புண்டு.

புனித அகுஸ்தீன் துறவற சபையினரால் நிர்வகிக்கப்படும் பென்சில் வேனியாவில் கணிதவியலில் இளங்கலைப் பட்டம் பெற்றவர், பதின்நான்காம் லியோ அவர்கள். வட அமெரிக்காவில் மட்டுமல்ல, உலகத்திலேயே மிகவும் பிரசித்தி பெற்ற காவாட் பல்கலைக்கழகத்து சட்டத்துறையில் கல்வி கற்க வாய்ப்புப் பெற்றவர். அங்கு சட்டத்துறையில் தேர்ச்சி பெற்றால் வட அமெரிக்கர்களின் கணிப்பின்படி ஆறு எண்கள் கொண்ட (1,000,000.00 - Six digit salary) ஊதியம் பெற்று செல்வாக்குடன் இவர் வாழ்ந்திருக்கலாம். ஆனால் இவர் அத்துறையைத் தெரிவு செய்யவில்லை. மாறாக புனித அகுஸ்தீனுடைய துறவற சபையைத் தெரிவு செய்தார். இதுதான் இறைத்திட்டமா?

**குருத்துவப் பணி**

ஒரு துறவறக் குரவராகி தென் அமெரிக்காவின் பெரு (Peru) என்ற நாட்டில் நற்செய்தித் தூதுவராக இருபது ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்து பணி புரிந்தார். வறியோருடன் ஒரு வறியவனாக வாழ்ந்து அவர்களின் வலிகளைச் சுமந்து, பாட்டாளி மக்களின் வறுமையை அனுபவித்தவர். பெருவின் மக்களின் உரிமைக் குரலாக, இவரது குரல் ஓங்கி ஒலித்தது. அடக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களின் மனித உரிமைக் குரலாக இவரது குரல் ஆட்சியாளருக்குக் கேட்டது. பயமென்ற சொல் இவரது சொற் களஞ்சியத்தில் இருக்கவில்லை. ஒரு துறவியின் முக்கியமான ஒரு பணி இறைவாக்கினராக வாழ்வது. (prophetic) ஏனோ இந்தப் பணி துறவறத்தைவிட்டு முற்றாக அழிந்துவிட்டது, அழித்துவிட்டார்கள். ஆசிரியப் பணி, மருத்துவப் பணி, சமூக சேவைப் பணி என்று சி றுசிறு வேலைகளில் இன்று துறவிகள் தம்மை மறைத்துக் கொள்கிறார்கள். பதின்நான்காம் லியோ அவர்கள் ஓர் துறவி ஒரு இறைவாக்கி னனாகவே பெருவில் பணிபுரிந்தார். இந்தப் பின்னணிதான் பதின்மூன்றாம் லியோவின் றேனும் நோவானும் என்ற சுற்றுமடலால் கவரப்பட்டு அவரது பெய ரையே தனது திருத்தந்தையின் பெயராகத் தெரிவு செய்தாரோ, இதை நான் மேலேயும் கூறியுள்ளேன்.

கரவையூர்ச் செல்வம்

**துறவிகள்**

அடுத்தடுத்து, இரு திருத்தந்தையர்கள் துறவற சபைகளைச் சார்ந்தவர்கள். போப் பிரான்சிஸ் யேசு சபையைச் சார்ந்தவர், பதின்நான்காம் லியோ புனித அகுஸ்தீன் சபையைச் சார்ந்தவர். அடுத்தடுத்து இரண்டு திருத்தந்தையர்கள் துறவிகள், இதன் மர்மமென்ன? எனக்குப் புரியவில்லை.

பதின்நான்காம் லியோ பெருவில் நற்செய்தித் தூதுவராகப் பணிபுரிந்த வேளையில், இந்தத் தறவற சபையின் முதல்வராகி உரோமையில் குடியேறினார். முதல்வராகப் பணிபுரிந்த காலத்தில் தனது சபையினரின் பணித்தளங்களைச் சந்தித்து, அவர்களுடன் வாழ்ந்து, உரையாடி, அவர்களின் கள நிலைகளை நன்கறிந்தவர். இவரது சபையினர் பணிபுரியும் ஐம்பது நாடுகளுள் இந்தியாவும் ஒன்று. குறிப்பாக கேரளாவிலும் தமிழ்நாட்டிலும் வாழும் அகுஸ்தீன் சபையினரையும் இருமுறை சந்தித்து, இவ்விரு மாநிலங்களிலும் வாழ்ந்து தென்னிந்தியாவின் கள நிலைகளை அறிந்தவர். (எங்களுக்குச் சொந்தம் எனத் தோன்றுகிறது) தலைமைத்துவ அனுபவம் இவருக்குப் புதிதல்ல.

இக்காலகட்டத்தில் இவர் திரு அவையின் சட்டவியலில் (Canon Law) கலாநிதிப் பட்டம் பெற்றார். உலகப் பிரசித்தி பெற்ற காவாட் பல்கலைக்கழகத்தில் சட்டம் கற்க வந்த வாய்ப்பினைத் தானாகவே தவிர்த்து, இப்பொழுது திருஅவையின் சட்டவியலைக் கற்றுத் தேர்ந்தாரே! முரண்பாடு போன்று தோன்றும் ஒரு மெய்யுரை (paradox) மீண்டும் தான் நேசிக்கும் பெருவிற்குச் சென்ற நிகழ்வுப் பொருந்தங்களா? மருத்துவரும் பல நூல்களின் ஆசிரியருமான தீபக் சேஸ் பிரா எழுதினார் "நிகழ்வுப் பொருத்தங்கள் புதுமைகளே".

**வாழ்க்கை முறை மாறவில்லை**

ஆயராகத் திருநிலைப்படுத்திய பின்னர், எங்கே மக்கள் தன்னிடமிருந்து விலகிவிடுவார்களோ என்று எண்ணி, தனது துறவறசபையின் நிறு வுனரான புனித அகுஸ்தீனை மேற்கோள் காட்டி அவர் தனது மக்களுக்குச் சொன்னார் " நான் உங்கள் ஆயர் தான், ஆனால், உங்களுடன் நான் ஒரு கிறித்தவன்" (பெருவின் பெரும்பான் மையான மக்கள் கத்தோலிக்கர்)

ஆயராக வாழ்ந்த காலத்திலும் சரி, பேராயராக வாழ்ந்த காலத்திலும் சரி இவரது வாழ்க்கை முறை மாறவில்லை. சிலர் பதவிக்கு வந்ததும் தங்கள் வாழ்க்கை முறையை மக்களுடன் பழகும் முறைகளை மாற்றிக் கொள்வார்கள். பதவி, அதிகாரம்,ஆணவம் அத்துடன் சுகபோக வாழ்வு வாழ்ந்து மக்களைப் புறந்தள்ளி விடுகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் தான் சட்டத்தையும், சடங்குகளையும் அர்த்தமற்ற பாரம் பரியங்களையும் கட்டிக் காப்பது மட்டுமல்ல, அவற்றை மக்கள் மேல் சுமத்தி விடுவார்கள். இவர்களில் சிலர் தான் செத்த மொழியான இலத்தீனை திரு வழிபாட்டில் திணிப்பார்கள். அந்த மொழியே மக்களை எட்ட வைத்துவிடும்.

பதின்நான்காம் லியோ அவர்கள் பதவியால் ஈர்க்கப்படவில்லை.தனது எளிமையில் இருந்தோ,ஏழ்மையில் இருந்தோ மக்களோடு மனிதனாக வாழ்வதில் இருந்தோ அவர் மாறவில்லை. திருத்தந்தையாகிய பின்னர் அவர் சொல்லக் கூடும் "நான் உங்களின் திருத்தந்தை தான். ஆனால் உங்களுடன் நானுமொரு மனிதன். நான் வட அமெரிக்காவின் குடிமகன் மட்டுமல்ல, பெருவின் குடிமகனுமாவேன். ஆனால், இப் பொழுது உங்களுள் ஒருவனாகி உலகத்துக் குடிமகன்" இதுவரை இவர் ஆற்றிய உரைகளினூடாகப் பார்க்கும் பொழுது மேற்கூறிய கூற்றுத்தான் எனக்குக் கேட்கின்றது.

**நான்காவது சுற்றிலா?**

133 கருதினால்கள் உலகின் பல்வேறு கோணங்களில் இருந்து வந்தவர்கள். மொழியால் கலாசாரத்தால், நிறத்தால், நாட்டால் வேறுபட்டவர்கள் ஒன்று கூடுகிறார்கள். அடுத்த திருத்தந்தையைத் தெரிவு செய்ய. இப்படிப்பட்ட ஒரு பின்புலத்தில், திருத்தந்தை ஒருவரைத் தெரிவு செய்கிறார்கள். வே ஓர் ஆச்சரியமல்லவா? நாலாம் சுற்றில் இருபத்து நான்கு மணித்தியாலங்களுக்குள் தெரிவு செய்துள்ளார்கள்.

இது முடியுமா?

இது சாத்தியமாகுமா?

எவ்வாறு நடந்தது? (தொடரும்)

# இயேசு கற்பித்த இறைவேண்டல்!



அருட்பணி குமார் ராஜா

இந்த மன்றாட்டைக் கத்தோலிக்கர்கள் பயன்படுத்தாத நாளே இல்லை என்னும் சிறப்புக் குரிய மன்றாட்டு எது? "விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே..." என்று தொடங்கும் வேண்டல் தான். இந்த மன்றாட்டின் சிறப்புகளைப் பட்டியலிட்டால், நமது வியப்புக்கு அளவிராது. இயேசுவே கற்றுத்தந்தது என்பதுதான் முதல் சிறப்பு. இது ஒரு திருவழிபாட்டு மன்றாட்டு, மரபு மன்றாட்டு, திருவிவிலிய மன்றாட்டு என்பது கூடுதல் சிறப்பு, நாம் சொந்தமாக இறைவேண்டல் செய்வதற்கான அளவீடு, மாதிரி என்பது மற்றொன்று. உல கெங்கும் உள்ள அனைத்துக் கிறிஸ்தவர்களையும் இணைக்கும் மன்றாட்டு இது. "எங்கள் தந்தையே" என்று கடவுளை அழைப்பதன் வழியாக மாந்தர் அனைவரையுமே கடவுளின் பிள்ளைகளாக்கும் வேண்டல் இது. இறைவேண்டல்கள் அனைத்துக்கும் இலக்கணமாகத் திகழ்கிறது என்பது இதன் தனித்துவச் சிறப்பு.

மத்தேயு நற்செய்தியில் (மத் 6:9-13) மக்கள்அனைவருக்கும் கற்பித்ததாகவும், லூக்கா நற்செய்தியில் (11:2-4) சீடர்களுக்குக் கற்றுத்தந்ததாகவும் அமைந்துள்ள இந்த மன்றாட்டில், திருவழிபாட்டு மரபின்படி மத்தேயு நற்செய்தியின் வடிவத்தையே வழிபாட்டில் நாம் பயன்படுத்துகிறோம்.கத்தோலிக்கத் திரு அவையின் மறைக்கல்வி இந்த மன்றாட்டை 'முழு நற்செய்தி நூலின் சுருக்கம்" ('The Summary of the Whole Gospel' (2761) என்று கூறுகிறது. தொடக்கத் திரு அவையினர் ஒருநாளின் மூன்றுவேளைகளில் இயேசு கற்பித்த மன்றாட்டை இறைவேண்டல் செய்தனர். எனவே, இது "திரு அவையின் மன்றாட்டு" (கதிம 2770) எனப்படுகிறது. இறையாட்சியின் ஏக்கத்தை வெளிப்படுத்துவதால் 'நிறைவுக் கால மன்றாட்டு" (Eschatological Prayer - fjpk 2771) என்றும் அழைக்கப்படுகிறது. தூய ஆவியாரின் தூண்டுதலால், இயேசு வழியாகத் தந்தையை நோக்கி எழுப்பப்படுவதால் இது ஒரு "திருத்துவ மன்றாட்டு" என்கிறது கத்தோலிக்கத் திரு அவையின் மறைக்கல்வி (கதிம 2766). திருப்பாடல்கள் பற்றி விரிவாக எழுதியுள்ள புனித அகுஸ்தினார், திருப்பாடல்களின் உணர்வுகள் இயேசு கற்பித்த இறைவேண்டல் முழுவதும் ஊடுருவியுள்ளன என்றும், (தொடர்ச்சி 07ம் பக்.)

# நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் பல்துறை ஆளுமைப் பணிகள்

(சென்றவாரத் தொடர்ச்சி...)

**தமிழ்த் தேசியவாதமும் கத்தோலிக்கமும்**

1950- 60 களில் காலிமுகத்திடலில் நிகழ்ந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் அருட்பணி. ஸ்ரனிஸ்லொஸ் சேவியர் தனிநாயகம் போன்ற பலரது பங்களிப்பும் 1970இல் எழுந்த தேசிய இனத்தின் எழுச்சியில் கத்தோலிக்கர்களின் பங்களிப்பு எடுத்துக்காட்டாகும். இவ்வேளையில் சுதேச திருப்பணியாளர்கள் பலர் தமிழ்த் தேசியப் பற்றின் காரணமாகத் தமிழ்ப் பெயர்களை எடுத்தமை குறிப்பிடத் தக்கதாகும். இப்போராட்டங்களில் பங்கு பற்றிச் சிறை சென்ற கத்தோலிக்கப் பொதுநிலையினர் பலரில் செல்வி கசில்டா மங்களநாயகியும் (அருட்பணி. சரத்ஜீவனின் தாயார்) ஒருவர். 80களின் இறுதியிலும் 90களிலும் கொழும்புவாழ் தமிழ் மற்றும் சிங்களப் புத்தி ஜீவிகள் தமிழீழ தேசிய எழுச்சிக்குக் கிறிஸ்தவர்களே உள்ளோட்டமான இரகசிய ஊக்கிகளாகச் செயற்படுகின்றனர் எனக் குற்றஞ் சாட்டியமை சிந்திக்கத்தக்கது.

**பணியில் ஒரு திருப்பம்**

மேலும் அமைதி நிறைந்த தியானயோகர் பேரருட்பணி. கலாநிதி கியோமர் ஆண்டகையின் காலத்தில் அவருக்கு உறுதுணையாகப் பணியாற்றிய 10 பேரில் ஆறு சுதேச குருக்களும் அடங்குவர். இவர்கள்

J. கிப்பொலிற் அ.ம.தி.,
S. ஞானப்பிரகாசர் அ.ம.தி.,
B.A. மருசலீன் அ.ம.தி.,
S.C. ஆசீர்வாதம் அ.ம.தி.,
J. பிரான்சீஸ் அ.ம.தி.,
B.A. தோமஸ் அ.ம.தி.,
C.S. மத்தியூஸ் அ.ம.தி.,
T.M.F.லோங்,
E.A. குரூசோ சகோதரர்,
M.J.S. பிளஸ்ஸோ சகோதரர் ஆவர்.

ஆயரால் பண உதவி செய்ய முடியாத கடினமான சூழ்நிலையில் இவர்களில் எல்லோருமே சுவாமி ஞானப்பிரகாசருக்குப் பலவழிகளிலும் விசேடமாகப் பணச்சிக்கலிலும் உதவி செய்தனர்.

குருமடத்தில் எழுத்துப்பணி தொடங்கிய காலம் முதல் 1947 ஜனவரி 22இல் இறக்கும் வரை சுவாமி ஞானப்பிரகாசரின் பணி 50 வருடங்கள் எனலாம். 1901 குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டது முதல் 1926 வரை மிகுந்த உத்வேகம் கொண்ட தீவிர மறையறிவிப்பாளராகச் செயற்பட்ட இவர் யாழ்ப்பாணத்தில் சங்கானை, மூளாய் தொடக்கம் முல்லைத்தீவில் முள்ளியவளை, கொக்கிளாய் வரை பரந்து விரிந்த தனது பங்கில், தன்னிடம் உதவிக் குருக்களாகப் பணியாற்ற வந்த

S.C. ஆசீர்வாதம் அ.ம.தி.,
P. உவில்லியம் யேசுதாசன் அ.ம.தி.,
S. பெனடிக்ற்
N. பெனடிக்ற் சூசைநாதர்
J.A. இராஜநாயகம் அ.ம.தி.,
B. பிலிப்ஸ் அ.ம.தி.,
ஆ.து. மரியாம்பிள்ளை,
J.A. கருணாகரர்,
S.E. பிலிப் பொன்னையா,
T.A.J. மதுரநாயகம்

போன்றோரிடம் மறையறிவிப்புப் பணிப்பொறுப்பை ஒப்படைத்துப் பணிக்கடலுக்குள்ளே முக்கித்தக்கி எழுந்து மூச்சுவிட்டு நீந்திப்பழக விட்டுவிட்டு, கழுகு தன் குஞ்சுகளைப் பறக்கப் பழக்குவது போலத் தனது பெறுமதி மிக்க ஆலோசனைகளால் அவர்களை வழிநடத்திக் கொண்டு 1926 முதல் 1947 வரை புதிய திருப்பத்திற்குள் தமிழ் மொழி, தமிழர் வரலாறு, யாழ்ப்பாண வரலாறு, சொற்பிறப்பியல் ஆய்வு போன்றவற்றில் இறங்கி, உலகோர் போற்றும் பல நூல்களை எழுதிக் குவித்தார்.

இவர் எழுதிய நூல்கள், துண்டுப் பிரசுரங்கள், உள்நாட்டு, வெளிநாட்டுப் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் வெளிவந்த கட்டுரைகள்

**வரலாற்று நூல்கள்:**

1. Kings of Jaffna during the Portuguese period (1916)
2.வையா வசனம் (1921)
3.யாழ்ப்பாண வைபவ விமரிசனம் (1928)
4.செகராசசேகரன்
5.History of Jaffna under the Portuguese and Duch Rule – களமுதி
6. யாழ்ப்பாணத்துத் தொல்குடிகள்
7. Ancient Kings of Jaffna (Incomplete)



8.தமிழரின் ஆதி இருப்பிடமும் பழஞ் சீர்திருத்தமும் - Early History of the Tamils and their religion (1932)
9. தமிழரின் சாதி உற்பத்தி - Origin of Cast among the Tamils (1920)
10. Indian ancient chronology and civilization (1921)
11. Life from the Excavationsof; the Indus Valley
12. History of the Catholic Church in Ceylon (1505 – 1602)
13. Early History of the Ancient Popes (18 – 4 – 22)
14. Catholicism in Jaffna (1926)
15. 25 Years of Catholic progress in the Diocese of Jaffna (1925)
16. ஊர்காவற்றுறை அர்ச். அந்தோனியார் கோவில் வரலாறு (19th June 1932)
17. Origin and history of the shrine of Madhu
18. இலங்கை வேதசாட்சிகள்
19. தமிழரின் பூர்வீக சரித்திரமும் சமயமும்
20. தர்க்க சரித்திர சுருக்கம்
21. பரராசசேகரன்
22.இலங்கை கத்தோலிக்க இலக்கியத்தின் சரித்திரம் *

பிற மதங்கள் பற்றியவை:

23. Philosophical Saivism or Saiva Siddhanta (1 – 2 – 17)
24. சுப்பிரமணிய ஆராய்ச்சி (1916)
25. பிள்ளையார் ஆராய்ச்சி (6 -9 - 21)
26. Historical aspect of Christianity and Buddism
27. மிருக பலி ஆராய்ச்சி (24 - 2 - 17)

**வாழ்க்கை வரலாறுகள்:**

28. அற்புத வரத்தி
29. Life of Cecilia Rasamma (26 – 12 – 1900)
30. உபதேசியார் சந்தியாப்பிள்ளை நற்சரிதை
31. ஶ்ரீமான் என். ஆர். முத்துக்குமாரு
32. Chrysanthus Daria
33. அர்ச். இசிதோர்
34.சாங்கோ பாங்கோ சுவாமிகள்

**சமய சம்பந்தமான நூல்கள்:**

35. மோட்ச பாதை
36. செபச் செண்டு
37. திவ்விய அவுஷதம்
38. பக்திப் பொக்கிஷம்
39. பரிசாரகன் கைநூல்
40. மோட்ச கபாடம்
41. காவற் சம்மனசு
42. நித்திய ஆராதனை
43. திருப்பதி யாத்திரிகர்களின் துணை
44. வாலிப வழிகாட்டி
45. கதா வினோத பூங்கொத்து
46. ஆண்டவர் ஆய்ந்த கனி
47. அருட் பெரும் சோதி*

**அருட்பணி. கு. யே. அன்ரனிபாலா**

**துண்டுப் பிரசுரங்கள்**

48. இரண்டு படுபொய்கள்
49. ஒரு பெருங் கடமை
50. இராச பாதை
51. ஆத்துமம்
52. சற்குரு
53. கடவுளின் லட்சணம்
54. விக்கிரக ஆராதனையும் சுரூப வணக்கமும்
55. மறு பிறப்பு ஆட்சேபம் I
56. மறு பிறப்பு ஆட்சேபம் I I (29 - 10 - 1916)
57. சைவர் ஆட்சேப சமாதானம் (1907)
58. பரிபூரண வஸ்து
59. உலக உற்பத்தி
60. கிறிஸ்துவின் கடவுட்தன்மை (11 - 6 - 10)
61. ஈடேற்ற வழி (28 - 2 - 1927)
62. புதுச் சைவம் (3 - 8 - 13)
63. சைவரும் மச்ச மாமிசமும் (1 - 1 - 15)
64. சமய ஆராச்சியும் நேர்மையும் (3 - 12 - 15)

(தொடரும்....)

## மறைப்பணி புரிந்த மாமேதை நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர்

**6. பணிவாழ்வில் காலடி**

வாழ்நாள் முழுவதும் சிறிய தந்தையைக் கவனித்து அவருக்குக் கடமை புரிவதே தமது கடன் என்றிருந்த ஞானப்பிரகாசர் குருமடம் செல்லத் தீர்மானிக்கின்றார். மனதில் சலனம், உள்ளத்திலே சங்கடம். இலங்கைப் புகையிரதத் தலைமையகத்தில் எழுது வினைஞர் பதவியிலிருந்து விடைபெற்றுக் கொண்டு அன்றைய நாள் விடிவதற்குள் வீடு வந்து சேர்கின்றார்.

மகனின் முடிவை அறிந்த தாய் தயங்கினார். இருப்பினும் மகனின் விருப்பத்திற்குத் தடையாக இருக்கவில்லை.சிறிய தந்தைக்கு இது மிகப் பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்தது. இம்முடிவை ஏற்க மறுத்தார். பெறாமகனின் தீர்மானத்தை மாற்றப் படாதபாடுபட்டார். எனினும் பயனில்லை. இறுதியாக தம்பிமுத்துப் பிள்ளை வேறொரு வழியும் இல்லாத நிலையில் தன்னைத் தானே தேற்றி, மனதை மாற்றிக் கொண்டார். இவையெல்லாம் 1895ஆம் ஆண்டில் நடந்தேறின.

இவ்வனுபவத்தை ஞானப்பிரகாசரே இவ்வாறு சொல்கிறார். "சிறிய தந்தையார் எனக்குச் செய்த உபகாரங்களுக்கு அவருக்கு உதவி செய்து கொண்டிருப்பதே என் கடமை என உணர்ந்தேன். கொலின் சுவாமியார் என்னைச் சந்தித்தபின் மனம் சற்று மாறிவிட்டது. அப்போதும் சிறிய தந்தையாருடைய நன்றியை எப்படி மறப்பேன் என்ற தடுமாற்றமே என்னை வருத்திக் கொண்டிருந்தது. அவரும் முன்னிலும் அதிகமாய் என்னில் பற்றுதல் காட்டி வந்தார். தமது அச்சியந்திரசாலைக்கு என் பெயரைச் சூட்டி, நானே தமக்குப் பின் அதை நடத்துவேன் என நம்பியிருந்தார். ஆறு மாத காலம் இந்தப் மனப்போராட்டம் நிலைநின்றது. ஈற்றில் கொலின் சுவாமி கூறிய ஒரே ஒரு வார்த்தையால் மனம் தெளிந்து உத்தியோகத்தை உதறிவிட்டு யாழ்ப்பாணக் குருமடத்துக்குப் புறப்பட்டேன்".

பென்னம்பெரிய விருட்சம் ஒரு சின்னஞ் சிறிய விதையிலே அமைதியாக உறங்கியிருப்பது போல எழுத்தாற்றல், பேச்சு வன்மை, பணியார்வம், சேவைமனம் இவ்விளையவனிடத்தில் அரும்ப ஆரம்பித்தன. அன்னாரின் பிற்காலப் பணிக்கு அவரின் ஆற்றல்கள் அப்போதே கட்டியங் கூறின.

ஆயரின் அனுமதியோடு குருத்துவக் கல்லூரி மாணவனாக இருந்துகொண்டே 'அமலோற்பவ இராக்கினி தூதன்' என்னும் மாத இதழை கத் தோலிக்க வாசனையோடு மணம் பரப்பச் செய்தார். தர்க்கப் பிரசங்கத்தை பல பணித்தளங்களில் செய்து பணி வாழ்வைத் தம் குருத்துவப் பயிற்சிக் காலத்திலே ஆரம்பித்தார்.

ஆறு ஆண்டுகள் குருத்துவ வாழ்க்கை நெறியினில் தோய்ந்து, தேர்ந்து, தெளிந்து ஆயர் யூலன் அ.ம.தி. ஆண்டகை அவர்களால் இற்றைக்கு ஒரு நூற்றாண்டுக்கு முன்பு 1901ஆம் ஆண்டு மார்கழித் திங்கள் முதலாம் நாள் தமது இருபத்தாறாவது வயதில் அமல மரித்தியாகிகளின்குடும்பத்தில் மனித-புனிதகுருத்துவப் பணிக்குத் தேர்ந்து கொள்ளப்பட்டார்.

**7. அற்புதமான ஆளுமையும் அதிசயிக்கும் ஆற்றல்களும்**

உயர்ந்த உருவம், மலர்ந்த முகம், கனிவூறும் கண்கள், விரிந்த நெற்றி, விறுவிறுத்த பார்வை, நீண்ட தாடி, நிமிர்ந்த நடை, கைகொடுக்கும் கரங்கள், களைப்படையாக் கால்கள், உறுதியான உள்ளம், எதையும் தாங்கும் இதயம் இவை எல்லாம் சுவாமி அவர்களின் நிழல் படத்தைப் பார்க்கின்றபோது எம் மனதில் நுழைகின்ற பதிவுகள். வெள்ளை நிற அங்கி அணிந்து, இடைப்பட்டி கட்டி, சிலுவையைச் சிந்தையில் நிறுத்தி, உள்ளத்தில் இருத்தி, அதனை நெஞ்சினில் தாங்கி அமைதியாகவும், அடக்கமாகவும் காணப்படுவார். அமலமரித்தியா கிகளுக்கே உரித்தான அருளின் களஞ்சியம் அது.

ஏழ்மை, கற்பு, கீழ்ப்படிவு, அவர் தெரிந்து கொண்ட வாழ்க்கை நெறிகள். எளிமை அவர் தேர்ந்து கொண்ட வாழ்க்கைமுறை. இனிமை அவரோடு கூடப் பிறந்தது. சேவை அவரோடு சேர்ந்திருந்தது. பணி வாழ்வு அவர் உள்ளத்தில் பரவிக் கிடந்தது. ஈகை அவரோடு இணைந்து கொண்டது. அன்பு அவரை ஆட்கொண்டது. அறிவு அவருக்குச் சேவகம் செய்தது. கல்வி அவரிடத்தில் கற்றுக்கொண்டது.

அவர் படிக்காத புத்தகம் இல்லை. பேசாத மேடை இல்லை. செய்யாத ஆராய்ச்சியும் இல்லை. சொல்லாத போதனையோ, செய்யாத பிரசங்கமோ இல்லையெனலாம். போகாத ஆலயங்களையோ, சந்திக்காத மக்கள் கூட்டத்தையோ காண முடியாது.

சிந்தனைத் தெளிவும், செயல் திறனும், உள்ளத்தில் ஒளியும், ஞான உறுதியும் சுவாமி அவர்களின் வார்த்தையிலும், வாழ்விலும் மிளிர்ந்தன. அவரது ஆளுமையின் திறன்களையும், அவர் ஆற்றல்களையும் அகழ்ந்து கொண்டு போகும்போதுதான் அது எவ் வளவு அற்புதமானது என்று எம்மை அதிசயிக்க வைக்கிறது.

**அருட்பணி. செ.அன்புராசா அ.ம.தி**

# அன்பின் வடிவமான இயேசுவின் இதயம்!



நம்மில் பலர் நல்லவர்களாய் இல்லாதிருக்க அடிப்படைக் காரணம் என்ன வென்றால், பலருடைய அன்பை நாம் புரிந்து கொள்ளவில்லை என்பது தான். நற்செய்தி என்றால் என்ன? ‘கடவுள் என்னை அன்பு செய்கிறார்“ என உணர்வது தான் நற்செய்தி. கடவுளின் அன்பை உணர்ந்து எல்லாவற்றிற்கும் நன்றி கூற நமக்குக் கடமையுண்டு. எசாயா நூல் 11-ஆம் அதிகாரம் இறை வனின் பராமரிப்புப் பற்றி மிக அருமை யாக எடுத்துக்கூறுகின்றது: “இஸ்ரேல் குழந்தையாய் இருந்தபோது அவன் மேல் அன்பு கூர்ந்தேன் எகிப்திலிருந்து என் மகனை அழைத்துவந்தேன். எப்ரா யிமுக்கு நடைபயிற்றுவித்தது நானே. அவர்களைக் கையிலேந்தியதும் நானே ஆயினும், அவர்களைக் குணமாக் கியது நானே என்பதை அவர்கள் உண ராமல் போனார்கள். அவர்கள் கழுத்தின் மேலிருந்த நுகத்தை அகற்றினேன் அவர்கள் பக்கம் சாய்ந்து உணவு ஊட்டினேன்.”

”பால் குடிக்கும் தன் சேயைத் தாய் மறப்பாளோ? கருத் தாங்கினவள் தன் பிள்ளைமீது இரக்கம் காட்டாதிருப்பாளோ? இவர்கள் மறந்திடினும், நான் உன்னை மறக்கவே மாட்டேன்!” (எசா 49:15).

“என் பார்வையில் நீ விலை யேறப்பெற்றவன் மதிப்பு மிக்கவன் இதோ, நான் உன் மேல் அன்பு கூர்கிறேன்” (எசா 43.4).

”என் உள்ளங்கையில் நான் உன்னைப் பொறித்து வைத்துள்ளேன்” (எசா 49:16).

இதைப்போல இன்னும் எத்தனை-யோ பகுதிகள் பழைய ஏற்பாட்டில் கடவுளின் அன்பைப்பற்றிக் கூறுகின்றன. நாம் நம் மையே மதிக்காவிட்டாலும், கடவுள் நம்மை மதிப்பிற்குரியவர்களாகப் பார்க்கின்றார். ஆண்டவர் இயேசுவின் பிறப்பே அன்பு நிறைந்ததுதான். தாழ்ச்சி, எளிமை, புன் சிரிப்பு எல்லாம் நிறைந்த குழந்தை இயேசு-வாக, கடவுள் மனிதராகப் பிறந்தது அன்பின் வெளிப்பாடுதான். அவர் வளர்ந்த விதத்திலே அன்பு. வளர்ந்த பிறகு அவர் செய்த அனைத் திலும் அன்பு. கானாவூர்த் திருமணத்திலே தண்ணீர் திராட்சை இரச மானது எல்லாரை யும் மகிழ்ச்சிப்படுத்தும் இயேசுவின் அன்பு.

மேதகு ஆயர் அருள்செல்வம்

இவ்வாறு அவருடைய பொதுவாழ்வின் மத்-தியில் அவரது பெருந்தன்மையான இதயத் தைப் பார்க்கலாம். உண்ணக்கூட நேரமில் லாமல் பணியாற்றிய தமது சீடர்களைப் பார்த்து, தனியே வந்து “என்னோடு சற்று இளைப்பாறுங்கள்” என அன்போடு அழைக் கின்றார். தொழு நோயாளியைப் பார்த்துப் பரிவு கொண்டார். கைம்பெண் தன் ஒரே மகனை இழந்த போது, “அம்மா, அழாதே” என்று பரிவு கொண்டார். இப்படியாக ஒடுக்க-ப்பட்டவர், கைவிடப்பட்டவர் அனைவர்மீதும் அன்பு காட்டுகின்றது ஆண்டவரின் இதயம்.

துன்பப்படுபவர்களைத் தூக்கி எறிந்துவிட்டுச் செல்லும் மக்கள் மத்தியிலே, திரும்பி வந்து கவனித்துக் கொண்ட நல்ல சமாரியனைப்போல் நம்மீது பரிவு கொண்டது நம் ஆண்டவர் இயேசுவின் இதயம் (லூக் 10). அதைவிட அதிகமாக, காணாமல்போன மகன் பற்றிய உவமையில், தந்தையின் அன்பை அடையாளம் காட்டும் இதயம் மன்னிக்க மன-மில்லாத மூத்த மகனைப்போல் இல்லாமல் தொலைவில் வரும்போது ஓடிச்சென்று கட்டி யணைத்து முத்தமிட்டு, அழுது அணைத்த தந்தையின் இதயம் மகனை மன்னித்து ஏற்றுக்கொண்டு புதிய ஆடை, மோதிரம், புதிய காலணி, விருந்து இவற்றால் மகிழ்ந்த தாராளமான தந்தையின் இதயம் துன்புறு வோருக்காக அழுகின்ற ஆண்டவரின் இதயம் எருசலேம் பட்டணம் மனம் மாறாததைக் குறித்துக் கண்ணீர் விட்ட இதயம் இலாசரின் கல்லறையில் மார்த்தா-மரியாவின் துன்ப-த்திலே கண்ணீர் விட்டு அழுத இயேசுவின் இதயம் இயேசு இறந்தபின் படைவீரர் ஒருவர் அவரது விலாவை ஈட்டியால் குத்தியபோது இரத்தமும் தண்ணீரும் வெளிவந்து, இறுதிமூச்சுவரை எல்லாவற்றையும் கொடுத் தது தான் இயேசுவின் இதயம்.

> உங்கள் அன்பு சொல்லில் இராமல், செயலில் வெளிப்பட வேண்டும்; பெறுவதை விட கொடுப்பதில் மகிழ்ச்சி காண வேண்டும்.
> – திருத்தந்தை பிரான்சிஸ்

இயேசுவின் திரு இதயத்திடம் இருந்து இரண்டு பாடங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று திருத்தந்தை பிரான்சிஸ் கூறுகின்றார். “ஒன்று. உங்கள் அன்பு சொல்லில் இராமல், செயலில் வெளிப்பட வேண்டும் இரண்டாவதாக, பெறு வதைவிட கொடுப்பதில் மகிழ்ச்சி காண வேண்டும். ” சிலர் அழகாய்ச் சிரிப்பார்கள், நன்றாகப் பேசு-வார்கள். அதைச் செய்யவேண்டும், இதைச் செய்யவேண்டும் என்பார்கள். ஆனால், எதுவும் செய்யமாட்டார்கள். சிறு வயதிலிருந்து அதுவேண்டும், இதுவேண்டும் எனக் கேட்டுப் பழகிக்கொள்கிறோம். கொடுப்பது எப்போது? கொடுக்கத் தொடங்குங்கள். நல்லது செய்பவர் களுக்குப் பாராட்டுகளைப் பரிசாகக் கொடுங்கள். நல்ல பாதுகாப்பை, உடனி ருப்பை வயதான பெற் றோருக்குக் கொடுக்கவேண்டும். நம் திருத்தந்தை பிரான்சிஸ் இயேசுவின் இதயத்திடம-ிருந்து நமக்குக் கற்றுத்தருகின்ற மூன்று பண்புகள்:

### 1. நெருக்கம்! (Closeness)

கடவுளிடமும் குடும்பத்தாரிடமும் நெருக்கமாக இருக்க வேண்டும். அருகில் இருந்தாலும் தொட்டுக்கொள் ளாத தண்டவாளம்போல் அந்நிய மாகவே வாழ்கி றோம். கடலில் இருக்கிற கூழாங்கல்போல் தொடப் படாமலேயே இருந்துவிடுகிறோம். கடவுள் நம் அருகில், மிக நெருக்க மாக இருக்கிறார். இரக்கத்துடன் இருக்கிறார். மென்மையாக இருக் கிறார். எனவே, நாம் மென்மையாக மாறவேண்டும். நம்முடைய சாதாரண தொடக்கத்தை மறந்துவிடக் கூடாது. கடவுள் செய்த நன்மைகளுக்கு நன்றிகூற வேண்டும். இஸ்ரயேல் மக்கள் கடவுளின் இரக்கத்தையும் பராமரிப்பையும் நினைத்துத் திருப் பாடல்களை இசைத்ததுபோல, நாம் நன்றி கூறவேண்டு. ஆண்டவரின் வார்த்தையை மீண்டும் மீண்டும் கேட்கவேண்டும்.

### 2. துன்புறுதல்! (Suffer)

தேவையில் இருவர்களுக் காக, நம்முடைய சகோதர-சகோ தரி களுக்காக, நம் குடும்பத்தாருக் காகத் துன்புற வேண்டும். நமது பாவங்களுக்காக மட்டுமல்ல. மக்களுக்கு வாழ்வு கொடுக்கவும் துன்புற்றார் இயேசு. வாய்ப்புக் கிடைக் கும்போதெல்லாம் குடும்பத்திற்கான ஆக்கப்பணிகளிலே பங்கெடுத்துத் துன்புற வேண்டும்.

### 3. ஆறுதல் கூறுதல்! (Console)

நம் ஆண்டவர் ஆறுதல் அளிக் கிறார் ஊக்கமூட்டுகிறார். இதுதான் இயேசுவின் இதயம். நாமும் அப்ப-டித்தான் வாழ வேண்டும். இன்று இயேசுவின் இதயம் நம்மைப் பார்த்துக் கேட்கிறது: “என் அன்பை உணரமாட்டாயா? உணர்ந்தால் என்னைபோல் வாழமாட்டாயா?“ என்று. அவருடைய அன்புத்தாய் அன்னை மரியாவின் இதயமும் இதைப்போன்று தான். கனிவான இதயம், மென்மையான இதயம், துன்புறும் இதயம்!

ஆண்டவர் செய்த அனைத்துச் செயல்களையும் நினைத்து நன்றி கூறுகின்ற இதயம். அன்பின் வடிவ-மான இயேசுவின் இதயம் நம்முடைய தாகட்டும்.

---

# இயேசுவும் திருத்தந்தை பிரான்சிசும்




அருட்சகோதரி ஆரோக்கிய ஜான்சிராணி DMI

இயேசுவின் “வழியும் உண்மையும் வாழ்வும் நானே” (யோவா 14:6) என்ற இறைவார்த்தையை வாழ்வாக்கியவர் நம் திருத்தந்தை பிரான்சிஸ். இயேசுவின் சீடராகப் பிரதிபலித்த திருத்தந்தை பிரான் சிஸ் மாமனிதர் மங்காத விளக்கு இயேசுவின் பாதச் சுவடுகளை இன்பமாகப் பின்பற்றியவர் கருணை உள்ளம் கொண்ட கடவுளின் படைப்பாற்றல்!

கடவுளை அன்பால் உணரலாம். இரக்கத்தி னால் அறியலாம். அன்பையும் இரக்கத்தையும் இரண்ட றத் தன் துறவற வாழ்க்கையில் துணிவோடு பின்பற்றிய வர் திருத்தந்தை பிரான்சிஸ். ஆன்மீகத்தில் ஆழமான-தால் அன்பால் உலகை ஆண்டவர். அவரை நினைக் காத உள்ளம் இல்லை, உணராத இல்லமும் இல்லை. கொரோனா என்ற கொள்ளை நோய் உலகைத் தாக்கிய போது திருத்தந்தை பிரான்சிஸ் நம் அனைவருக்காக வும் நம் மீட்புக்காகவும் புனித பேதுரு சதுக்கத்தில் விடாத மழையிலும் செபித்தார் என்பதற்கு நாங்களே சாட்சி கள். கடவுள்மேல் வைத்த பேரன்பாலும் நம்பிக்கை யினாலும் அனைவரையும் ஆண்டவர்பால் அரவ ணைத்து, இறைவன் மீது நம்பிக்கையை ஆழப்படுத்தும் வகையில் காணொளியில் திருப்பலியை நிறைவேற்றி “திருவிருந்துதான் நமக்கு அருமருந்து“ என்று ஒவ் வொரு நாளும் இறைப்பிரசன்னத்தில் வழிநடத்தியவர். இயேசுவின் விழுமியங்களான செபம், அன்பு, இரக்கம், மன்னிப்பு, ஒற்றுமை, தாழ்ச்சி இவற்றையெல்லாம் கடைப்பிடித்து வாழும் மனிதர்கள் புதைக்கப்படுவ-தில்லை. மாறாக, நம் இதயத்தில் விதைக்கப்படுகிறார் கள். பல நூற்றாண்டு இம்மண்ணிலே பலராலும் போற் றப்பட இருப்பவர் நம் திருத்தந்தை பிரான்சிஸ்.

“விண்ணுலகில் இருக்கின்ற எங்கள் தந்தையே, உமது பெயர் தூயதெனப் போற்றப்பெறுக” (மத் 6:9) என்று இயேசு தந்தையை நோக்கிச் செபித்தது போல திருத்தந்தை பிரான்சிசும் செபத்தின் மூலம் கடவுளின் தயவையும் வழிகாட்டுதலையும் நாடினார்.

பிரான்சிஸ் செபத்தை வாழ்வின் ஆதாரமாகப் பார்த்தார். செபத்தின் மூலம் மனிதர்கள் கடவுளின் உதவியையும் ஞானத்தையும் பெறமுடியும் என நம்பினார். சிறியோர் முதல் பெரியோர் வரை இறையன்பை எடுத்து இயம்பி யவர் நம் திருத்தந்தை பிரான்சிஸ். அகிலத்தை அன்பால் அரவணைத்-தவர் அன்புக்கும் அடிபணியாதது எதுவுமில்லை என்பதை வாழ்வாக்கியவர்: இயேசுவின் முதன்மையான கட்டளையைக் கடைப்பிடித்தவர் ”முழு இதயத் தோடும் முழு உள்ளத்தோடும் முழு மனத்தோடும், உன் ஆண்டவராகிய கடவுளிடம் அன்பு செலுத்து. இதுவே, தலைசிறந்த முதன்மையான கட்டளை” (மத் 22:37) ”உன்மீது நீ அன்புகூர்வது போல உனக்கு அடுத்து இருப்பவர் மீதும் அன்புகூர்வாயாக” (மத் 22:39) என்ற இந்த இரண்டு கட்டளைகளுக் கும் சொந்தக்காரர். தன் சொல்லாலும் செயலாலும் வாழ்வாலும் கட்டளை-களைக் கடைப்பிடித்து இறைவனின் அருள்கரம் பிடித்தவர்,

ஏழை-எளியவர்கள்மீது இரக்கம் கொண்டார். பாவிகளின்மீது இரக்கம் கொண்டார். கைம்பெண்கள், கைவிடப்பட்டவர்கள்மீது இரக்கம் கொண்டார். சிறையில் வசித்தவர்கள்மீதும் இரக்கம் கொண் டார். தந்தை யாம் கடவுளிடமும் இயேசுவிடமும் பெற்ற இரக்கத்தைத் தூய ஆவியின் துணையோடு செயல்படுத்தினார். ருவாண்டா நாட்டில் நடந்த இனப் படுகொலைக்காக மன்னிப்புக் கேட்டார்.

(தொடர்ச்சி 07ம் பக்.)

# அன்பின் மகிழ்வு



30

## நற்கருணை ஆன்மீகமும் குடும்பமும்

கடந்த ஞாயிற்றுக்கிழமை நம்முடைய மறைமாவட்டம் மாத்திரம் அல்ல அகில உலகத் திருஅவை முழுவதும் சிறப்பாக இயேசுவுடைய திருவுடல் திரு இரத்தப் பெருவிழா வைக் கொண்டாடியது. குறிப்பாக இந்தத் திருவுடல் திரு இரத்தப் பெருவிழாவில் நற்கருணை வீதி வீதியாக எடுத்துச் செல்லப்பட்டு ஒரு விசுவாச சத்தியம் வெளிப்படுத்தப்பட்டது. அதாவது நற்கருணையில் இயேசு உடலோடும், ஆன்மாவோடும், தெய்வீகத்தோடும் இருக்கின்றார் என்பதை நாங்கள் விசுவசிக்கிறோம், அதை உங்களோடு பகிர்ந்து கொள்ளுகிறோம். என்று வீதி வீதியாக மக்கள் பவனி சென்ற காட்சி மனதை உருக்குகின்ற காட்சியாக இருந்தது. இது நம்முடைய மறைமாவட்டத்தில் மாத்திரம் அல்ல அகில உலகத் திரு அவையிலும் ஆண்டு தோறும் சிறப்பான முறையிலே கொண்டாடப்பட்டு வருகிறது. ஆகவே நற்கருணையும் குடும்பமும் எனும் போது நற்கருணை எவ்வாறு குடும்பத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது, குறிப்பாகக் குடும்பத்தில் நற்கருணை ஆன்மீகத்தின் தேவை என்ன என்பதை நாங்கள் இங்கு புரிந்து கொள்ள வேண்டும்.

ஒரு குடும்பத்தின் மையம் நற்கருணை ஆன்மீகம். ஒருமுறை இந்தியாவில் இருக்கின்ற போட்டார் இறை தியான இல்லத்திற்குத் தியானம் செய்யச் சென்றபோது இந்த தியானத்தை நெறிப்படுத்தியவர் பெரும் மதிப்பிற்குரிய அருட்பணி. அகஸ்ரின் பலோறான். அவர் ஒரு மணித் தியாலத்திற்கு மேல் மறையுரை ஆற்றுவார் ஆனால் மறையுரை முடிகின்ற பொழுது ஏன் இவர் முடித்தார் என்பது போன்ற ஒரு உணர்வு எழும். அந்தளவிற்கு ஒரு ஆழ மான, அர்த்த முள்ள, எங்கள் இதயங்களைப் பற்றி எரிய வைக்கக்கூடிய மறையுரை ஆற்றக்கூடிய வல்லமை பெற்றவர் அவர். ஒருமுறை தன்னுடைய மறையுரையிலே குறிப்பிட்ட ஒருகுடும்பத்தையும் இந்த நற்கருணை ஆன்மீகத்தினுடைய முக்கியத்துவத்தையும் வெளிப்படுத்தி மறையுரை ஆற்றுகையில் அவர் சொன்னார் என்னுடைய வாழ்வில் மறக்க முடியாத நாள் என்னுடைய அன்னை மரணித்த நாள் என் அன்னையினுடைய உடலை ஆலயத்தின் நடுவிலே வைத்து நான் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பீடத்திலே நின்ற பொழுது என் அன்னை என்னை வளர்த்த விதம் என் மனக்கண்முன் பதிந்தது, நன்றி உணர்வுகள் வழிந்தோடின என்னுடைய கடந்த கால வாழ்வின் நினைவுகள் பசுமையாக என்னுடைய இதயத்திலே ஒடிக்கொண்டிருந்தது. எப்படி என் அன்னை என்னை வளர்த்தார். ஒவ்வொரு நாளும் காலையில் அன்போடும் பாசத்தோடும் தம்பி என்று எழுப்புவார். எழுப்பி என்னை குளிப்பாட்டி எனக்கு அழகான உடைகளை எல்லாம் உடுத்தி, என்னை அழகு பார்த்து, வீட்டின் முன் பக்கம் கொண்டு வந்து தம்பி நாங்கள் ஒவ்வொரு நாளும் திருப்பலிக்குப் போக வேண்டும். நற்கருணை பெறவேண்டும், நற்கருணை ஆண்டவரை சந்திக்க வேண்டும் என்று கூறுவார். இப்பொழுது நாங்கள் ஆலயத்திற்கு செல்லப் போகின்றோம், ஆலயத்திற்கு செல்லும் போது நீ வெறும் கையோடு செல்லக்கூடாது, ஆண்டவருக்கு ஏதாவது கொண்டு செல்ல வேண்டும் என்று சொல்லி ஒரு அழகான ஒரு சிறிய கூடையை என் கரங்களிலே தருவார். நீ சென்று எங்களுடைய வீட்டில் இருக்கின்ற பூந்தோட்டத்தில் பூக்களைப் பறிக்க வேண்டும் அதன் பின் ஆலயத்திற்கு நாம் சொல்வோம் என்று சொல்லி கூடையைத் தந்தபோது நானும் பூக்களைப் பறித்து கொண்டு வருகிற பொழுது, அன்னை அழகாக உடுத்தி ஒரு தேவதை போல் அங்கு நிற்பார் என் தாய் என் கரங்களைப் பற்றிப் பிடித்து என்னை ஆலயத்திற்கு அழைத்துச் செல்வார். கோவிலுக்குச் செல்வது ஒரு ஆழமான அனுபவம். ஒரு கையில் என்னுடைய தாயினுடைய கை மறு கையில் ஒரு கூடை இவ்வாறாக அழைத்துக் கொண்டு ஆலயத்திற்குள்ளே சென்ற போது, ஆலயத்தின் மையப் பகுதிக்கு என்னை அழைத்துச் செல்வார். அங்கே நற்கருணை ஆண்டவருக்கு ஆராதனை செலுத்திய பிற்பாடு ஒவ்வொரு முறையும் கையை நீட்டி நற்கருணை ஆண்டவரை சுட்டிக் காட்டி இவர் தான் நற்கருணை ஆண்டவர், இவர் தான் எங்களுடைய வாழ்வில் அல்பா(க)வும் ஒமேகாவும், தொடக்கமும் முடிவும், இவரிலே தான் நீ இருக்கின்றாய், வாழுகின்றாய், இயங்குகின்றாய் என்று ஒவ்வொரு முறையும் சொல்லித் தருவார். பிற்பாடு நாங்கள் வந்து அங்கு இருக்கின்ற அந்த கதிரையிலே அமர்கின்ற பொழுது, எனக்கருகில் என் தாயும் அமர்வார் அந்த நற்கருணை ஆண்டவரை நான் உற்று நோக்குவேன், வெறும் அப்பம் தான் எனக்குத் தெரிந்தது, ஆனால் அந்த வேளையில் என் அன்னை நற்கருணை ஆண்டவரை உற்று நோக்கிக் கொண்டே இருப்பார், நீண்ட நேரம் இருப்பார். அப்பொழுது ஒரு சிறிது நேரத்திற்கு பிற்பாடு அவருடைய முகத்தில் ஒரு பெரும் மாற்றம், ஒரு ஒளி, ஒரு பிரகாசத்தை நான் கண்டேன். ஒவ்வொரு முறையும் மோயிசன் பாலை வனத்திலே கூடாரத்தின் உள்ளே போய் வருகின்ற போது அங்கே மக்கள் அவரு டைய முகத்தைப்

**அருட்பணி மனுவற்பிள்ளை டேவிட்**
**அகவொளி குடும்ப நல மையம்**



பார்க்கும் போது ஒளி வீசும். அந்த ஒளியை அவர்களால் சகித்துக் கொள்ள முடியவில்லை தெய்வீகப் பிரசன்னம் நான் நற்கருணையில் பார்ப்பேன் அவ்வேளை அம்மாவுடைய முகத்தையும் பார்ப்பேன். அப்பொழுது எனக்கு தெரிந்தது, என் அன்னை உடலோடும், ஆன்மாவோடும், தெய்வீகத்தோடும், இருக்கின்ற நற்கருணை ஆண்டவரிடம் நண்பரைப் போலப் பேசிக் கொண்டிருக்கின்றார். பேசுகின்ற ஒவ்வொரு தடவையும் அவரின் முகத்தில் பிரகாசம் அந்தப் பிரகாசம் வெளிப்படும் எனக்குத் தெளிவு படுத்தியது, நற்கருணையில் உடலோடும், ஆன்மாவோடும், தெய்வீகத்தோடும் இயேசு இருக்கிறார் என்று. நான் படித்த இறையியலுக்கு மேலாக, நான் பெற்ற பட்டங்களுக்கும் மேலாக, இந்த நற்கருணை ஆன்மீகத்தை எனக்குப் போதித்தவர் என்னுடைய தாய். இன்று நான் நற்கருணை எழுந்தேற்றம் செய்யும் போது பலர் அதிசயங்கள் அற்புதங்களைக் காண்கிறார்கள் என்றால். பல குணப்படுத்தல்களைக் காண்கிறார்கள் என்றால் இந்த அடிப்படை ஆன் மீகத்தை எனக்குக் கொடுத்தது குடும்பம் குடும்ப நற்கருணை ஆன்மீகம் என்றும் அந்த நற்கருணை குடும்பத்திலே எவ்வாறு இருக்கிறது எவ்வாறு பெற்றோர் இந்த ஆன் மீகத்தை பிள்ளைகளுக்கு கொடுக்க வேண்டும் என்றும் இந்த நிகழ்வு மிக மிக அழகாக எடுத்துக் காட்டுகிறது.

குடும்பம் ஒரு குட்டித் திருஅவை என்று அழைக்கப்படுகின்றது. இந்தக் குடும்பத்திலே தான் விசுவாசம் வாழப்படுகிறது, விசுவாசம் பருகப்படுகிறது. ஆகவே இந்தக் குட்டித் திருஅவையினுடைய மையமாக இருப்பது நற்கருணை. அதாவது இயேசுவினுடைய தற்கொடை அன்பைப் பிரதிபலிக்கின்ற நற்கருணைதான் குடும்பத்தினுடைய மையமாக இருக்க வேண்டும். இந்தக் குடும்பங்கள் எத்தனையோ விதமான பிரச்சினைகளை சந்திக்கின்ற வேளையில் இந்த நற்கருணை ஆன்மீகமானது தங்களுடைய குடும்பத்திலிருக்கின்ற அன்பை, ஒருமைப்பாட்டை மற்றும் அவருடைய சமுகத்திலே இந்தக்குடும்பம் செய்ய வேண்டிய பணிக்கான ஆழமான ஒரு வல்லமையான வழியைக் காட்டுவது நற்கருணை ஆன்மீகமாகும்

### 1. நற்கருணை தற்கொடையின் ஓர் அடையாளம்

ஒவ்வொரு நாளும் திருப்பலியில் "இது உங்களுக் காகக் கொடுக்கப்படும் எனது உடல். இதை என் நினைவாகச் செய்யுங்கள்" ( லூக்கா 22: 19 ) என்ற வார்த்தைகள் எங்களுடைய காதுகளிலே ஒவ்வொரு திருப்பலியிலும் ஒலிக்கின்றன. அதாவது நற்கருணை என்பது தற்கொடையாகத் தன்னையே கொடுக்கின்ற ஓர் அருட்சாதனம். ஆகவே தான் குடும்பங்களிலே ஒருவர் தன்னை மற்றவர்களுக்குத் தற்கொடையாக எவ்வாறு கொடுக்க வேண்டும் என்பதை எங்களுக்கு தெளிவுபடுத்துவது நற்கருணை ஆகும். ஒரு முறை ஒரு இளம் தம்பதியினர் தங்களுடைய பங்குத் தந்தையிடம் தங்களுடைய வேதனைகளைப் பகிர்ந்து கொண்டார்கள். அதாவது தங்களுடைய குழந்தைகளை வளர்க்கின்ற பொழுது அவர்கள் எதிர்கொள்ளுகின்ற சவால்களைப் பற்றி பங்குத் தந்தையோடு பகிர்ந்து கொண்டார்கள். அந்த வேளையிலே அந்தப் பங்குத் தந்தை அவர்களைப் பார்த்துக் கூறிய நற்கருணை ஆன்மீகம், அதாவது நீங்கள் ஒவ்வொரு முறையும் நித்திரையற்ற இரவை செலவளிக்கின்ற பொழுது, ஒவ்வொரு முறையும் உணவை பிள்ளைகளோடு பகிர்ந்து கொள்ளுகின்ற பொழுது, ஒவ்வொரு முறையும் நீங்கள் பொறுமையாக இருக்க வேண்டும் என்கின்ற செயற்பாடுகளைச் செய்கின்ற பொழுது நினைத்துக் கொள்ளுங்கள் நீங்கள் சிறிய நற்கருணையாக உங்களுடைய குடும்பத்திலே வாழுகின்றீர்கள்.

அதாவது அன்பில் கிறிஸ்து தன்னை அந்தப் பீடத்திலே பலியாகக் கொடுத்தது போல நீங்களும் கொடுக்கிறீர்கள் என்பதை மனதில் வைத்துச் செயற்படுங்கள் என்றார். ஆகவே இந்தச் சிறிய சிந்தனை அவர்களுடைய வாழ்க்கையின் பரிமாணங்களை நிறைவாக மாற்றி அமைத்தது. ஒவ்வொரு நாளும் அவர்கள் தங்களுடைய பிள்ளைகளுக்காக பட்ட கஸ்டங்களை, ஒரு புனிதமான காணிக்கையாக அவர்கள் மாற்றினார்கள். அதாவது தங்களுடைய அந்தச் சிறிய சிறிய தியாகங்கள், இயேசு சிலுவையிலே செய்த தியாகத்தின் ஒரு பரிமாணம் என்பதை அவர்கள் உணர்ந்தார்கள். ஆகவே தான் குட்டித் திருஅவையாக இருக்கின்ற குடும்பத்திலே அந்தப் பெற்றோர்கள் எதையும் கணக்கெடுக்காமல் தங்களுடைய பிள்ளைகளுக்குக் கொடுக்க வேண்டும், அவ்வாறு அவர்கள் இந்த நற்கருணை ஆன்மீகத்தை, அதாவது தங்களைத் தங்களுடைய பிள்ளைகளுக்குத் தற்கொடையாகக் கொடுக்கின்ற இந்த ஆன்மீகத்தைக் கண்டு கொள்ளுகின்ற பொழுது பிள்ளைகளும் தங்களை மற்றவர்களுக்குக் கொடுக்கின்ற கொடையாக மாற்றிக்கொள்வார்கள். இங்கே தான் இந்த நற்கருணை ஆன்மீகம் மலர்ந்து கொண்டிருக்கிறது. வீடுகளிலே இந்த ஆன்மீகம் நமக்குத் தேவைப்படுகின்றது.

### 2. நற்கருணை ஒற்றுமையின் ஊற்று

புனித பவுல் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகத்திலே 10 ம் அதிகாரம் 17வது வசனத்திலே கூறுகின்றார், "நாம் பலராயினும் ஒரே உடலாய் இருக்கிறோம். ஏனெனில், நாம் அனைவரும் அந்த ஒரே அப்பத்தில் தான் பங்கு கொள்கிறோம்" என்று ஆகவே தான் நற்கருணை எல்லா நம்பிக்கையாளர்களையும் ஒன்றிணைக்கிறது அதாவது ஒரு குடும்பத்தை ஒரு நல்ல அன்பின் சமூகமாக மாற்றுகின்றது. ஆகவே இந்த நற்கருணை ஆன்மீகம் ஒற்றுமைக்கு மிகவும் முக்கியமானதாகும் ஒரு குடும்பத்திலே பிள்ளைகளுக்கிடையே பெரும் பிரச்சினை சண்டை ஏற்பட்டது. இதை உணர்ந்த பெற்றோர்கள் ஞாயிறு திருப்பலிக்குப் போய் வந்த பிற்பாடு, ஒரு புதிய பாரம்பரியத்தை அங்கே உருவாக்குகின்றார்கள். அவர்கள் ஒரு மெழுகுதிரியை வீட்டிலே ஏற்றினார்கள் சிறிய நன்றிச் செபத்தை சொன்னார்கள், அவ்வாறு சொல்லி இயேசுவினுடைய பிரசன்னம் அமைதி அந்தக் குடும்பத்திலே இருக்க வேண்டும் என்று மன்றாடினார்கள் நாட்கள் செல்லச் செல்ல இந்தக்கணங்கள் அதாவது ஒன்றாக சேர்ந்து செபித்த கணங்கள் அவர்களுடைய இதயங்களை இளகப்பண்ணின. பிள்ளைகள் ஒருவருக்கொருவர் உதவி செய்யத் தொடங்கினார்கள். ஒருவர் ஒருவரிடம் மன்னிப்புக்கோரினார்கள். அதாவது நற்கருணை அவர்களை இணைக்கின்ற ஒன்றாக மாறி அவர்களுடைய அந்த கடந்த கால செயல்களான பிரிவினைகளை நீக்கியது ஆகவே ஒரு குடும்பம் ஒன்றாகச் செபிக்கின்ற பொழுது, சிறப்பாக நற்கருணையிலிருந்து அந்த ஊற்றைப் பெறுகின்ற பொழுது மன்னிப்பு என்பது மிக இலகுவாக மாறுகின்றது ஆகவே தான் திருப் பலியில் பெறப்படுகின்ற சமாதானம், வீட்டுக்குள்ளும் செல்ல வேண்டும் என்பதை நற்கருணை ஆன்மீகம் எமக்கு எடுத்தியம்புகின்றது.

### 3. நற்கருணையும் குடும்ப மறை பரப்புப் பணியும்

ஒவ்வொரு திருப்பலியின் இறுதியிலும் "உங்களுடைய வாழ்க்கையினால் கடவுளை மகிமைப்படுத்த சமாதானத்தில் சென்று வாருங்கள்" என்கின்ற ஒரு அழைப்புக் கொடுக்கப்படுகின்றது. ஆகவே தான் நற்கருணை என்பது ஒரு முடிவு அல்ல மாறாக நற்கருணைப்பலி கிறிஸ்தவ சாட்சியத்தின் தொடக்கமாக இருக்கிறது நற்கருணைப் பலி இந்தக் குடும்பங்களுக்கு தங்களுடைய உறவுகளை வளர்த்து, மற்றவர்களுக்காக வாழ அருளைக் கொடுக்கிறது. ஒரு குடும்பம் ஒவ்வொரு நாளும் அந்தப் பங்கில் இருக்கின்ற ஒரு வயோதிபக் குடும்பத்தை வீட்டுக்கு அழைத்து ஞாயிறு திருப்பலிக்குப் பின் உணவு கொடுப்பார்கள். ஒரு சிறிய விடயமாகத் தோன்றிய இந்தப் பணி ஒவ்வொரு வாரமும் செய்கின்ற பணியாக மாறியது. அவருடைய உணவு ஒரு சாதரண உணவாக இருந்தது. அவர்கள் கரிசனையோடும், அன்போடும், இறைவனுக்கு நன்றியாகவும் பகிர்ந்து கொண்டது அந்த வயோதிபக் குடும்பத்திற்கு ஒரு பெரிய ஆசீர்வாதமாக இருந்தது நாட்கள் செல்ல அந்த குடும்பத் தலைவி சொல்கிறாள். எங்களுடைய மேசை ஆலயத்தினுடைய பீடத்தின் ஒரு நீட்சியாக அமைந்துள்ளது. ஏனென்றால் ஆலயத்தினுடைய பீடம் எங்களுடைய மேசையிலே தொடர்கிறது.

(தொடர்ச்சி 7ம் பக்.)




# என் கேள்விக்கென்ன பதில்!

**அருட்பணி செ. அன்புராசா**

**கேள்வி: அண்மையில் பதுளையில் சகோ தரன் சகோதரனை நகரப் பகுதியில் வைத்து வாளால் வெட்டியது, புளியங் குளத்தில் கணவன் மனைவியைக் கழுத்தை வெட்டிக் கொலைசெய்தது போன்ற சம்பவங்கள்மிருக்கத்தனமானவை. இவை எதனைக் காட்டுகின்றது?**

பதில்: சுஜி, சுவன்மமும் வைராக்கியமும் வளருகிறது என்பதையும், காட்டுமிராட்டித்தனம் கட்டுமீறிப் போகிறது என்பதனையும், சட்டம் ஒழுங்கு இன்னும் சரியாக, முறையாக நடை முறைப்படுத்தப் படுவதில்லை என்பதனையும் காட்டுகிறது.

(வாசுகி, யாழ்ப்பாணம்)

**கேள்வி: செம்மணி சிந்துப்பாத்தி மயா- னத்தில் புதைகுழியிலிருந்து அகழப்பட்ட மனித எலும்புக் கூடுகளுக்கும் ஏனைய புதைகுழிகளில் இருந்து மீட்கப்பட்ட மனித எச்சங்களுக்கும் சர்வதேச விசாரணை யைக் கோரும் 'அணையா விளக்கு' என்ற மூன்று நாள் அமைதிவழி எதிப்புப் போராட்ட நிகழ்வின் இறுதிநாளில் நடந்த சம்பவம் பற்றி உங்கள் கருத்து என்ன?**

பதில்: வாசுகி, 'கட்சி வேறுபாடுகளை மறந்து அனைவரும் இணைந்து சர்வதேச விசாரணை யை வலியுறுத்துவோம் வாரீர்' என அழைத்து விட்டு வந்தவர்களை நாகரிக மற்ற முறையில் விரட்டியடிப்பது - கலைப்பது சரியல்ல, மிகத் தவறான செயல்! அதேவேளை, தமிழ்த் தேசியம் பேசுகிறவர்களும் தமிழ்த் தேசியம் பேசுகிற அரசியல் கட்சிகளும் மக்களின் எண்ணங்களைப் புறந்தள்ளி, தாம் நினைத்த படி தமது சுயநல தேவைகளை மட்டும் நிறைவேற்றுவதும், மக்களின் உணர்வோடு அபிலாசைகளோடு விளையாடுவதும் அபத்தமானது என்பதை யும் இந்நிகழ்வுகளில் இருந்து அனைவரும் கற்றுக்கொள்ள வேண்டும்.

(மல்லிகா, முல்லைத்தீவு)

**கேள்வி: இஸ்ராயேல் ஈரான் போரில் அமரிக்கா நுழைத்தது பற்றிய உங்கள் எண்ணமென்ன?**

பதில்: மல்லிகா, நுழைந்ததில் தவறில்லை! யாரும் நுழையலாம்! ஆனால், சண்டைபிடிக்க வேண்டாம், சமாதானமாக பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைக்குத் தீர்வுகாண்போம் என நினைத்திருந்தால் - செயற் பட்டிருந்- தால் சிறப்பாக இருந்திருக்கும்! ஆனால், அமரிக்கா அப்படியா செய்தது மிகத் தவறானது! அதற்கான பாடத்தையும் அது கற்றி ருக்க- வேண்டும்! திருத்தந்தை 14ம் இலியோ உலக நாடுகளிடம் வேண்டுவது போல, "மீண்டும் போர் ஒருபோதும் வேண்டாம்" என் பதை போர்புரியும் நாடுகளுக்கு அமரிக்கா போன்ற நாடுகள் உணர்த்த வேண்டும். அதை விடுத்து எரியும் நெருப்பில் எண்ணெய் வார்ப்ப- துபோல எவரும் பச்சையாகச் சொன்னால் எந்தப் பௌத்தியக்கார னும் செயற்பட முடியும்! அதனைத்தான் இஸ்ராயேல் ஈரான் போரில் அமரிக்கா செய்திருக்கிறது!

(மீனா, பிரான்சு)

**கேள்வி: கணவன் மனைவிக்கிடையே இடம்பெறும் அநேக மான விவாதங்கள் - சண்டைகளுக்குத் தீர்வாக ''உன் இஷ்ரப்படி செய்!'' என்று கணவன் ஒருவார்த்தை கூறி விட் டால் இருவருக்கும் இடையிலான விவாதத்திற்கு இட மிருக்காதல்லவா!?**

பதில்: உண்மைதான் மீனா! கணவன் அப்படிச் சொல்லிவிட்டால் அவ்விடயம் முடிவுக்கு வந்துவிடும். ஆனால், 'உங்க இக்ஷரப்படி செய்க!' என்று கணவனைப் பார்த்து மனைவி சொல்லிவிட்டால், 'விடயமே அப்பதான் ஆரம்பிக்கிறது' என்று பொருள்! புரிகிறதா மீனா!

(கண்ணன், லண்டன்)

**கேள்வி: வெளிநாடு என்ற ஒன்றால் இன்று நம்முடைய பல குடும்பங்கள் சின்னாபின்னப்பட்டுக் கிடக்கின்றன. சில குடும்பங்களில் பெற்றோர் தனிமையில் வாடுவதை அவ- தானிக்கக் கூடியதாக இருக்கிறது. பிள்ளைகள் நன்றாக இருந்தும் பெற்றோர் உதவியில்லாது கஸ்ரப்படுகிறார்கள். இந்நிலை குறித்து உங்கள் பார்வை?**

பதில்: கண்ணன், அண்மையில் ஒரு சிந்தனையைப் படித்தேன்: "பெரியமகன் அமெரிக்காவில்! சின்னமகன் ஆஸ்திரேலியாவில்! பொண்ணு லண்டனில்! அப்பா ஆஸ்பத்திரியில்! அம்மா தனிமை யில்!" என்று இருந்தது! வெளிநாடுகளுக்குத் தம் பிள்ளைகளை அனுப்பிவிட்டு நம் நாட்டில் வாழும் அநேகமான நமது பெற்றோரின் நிலைமை இதுதான்!

## நற்கருணை....

(6ம் பக்கத் தொடர்ச்சி)

ஆகவே தான் இந்த நற்கருணையினாலே ஊட்டம் பெற்ற குடும்பங்கள் தங்களுக்கு மேலாக மற்றவர்களைப் பற்றிச் சிந்தித்து இந்த ஏழைகளிலும் தனித்து விடப்பட்ட- வர்களிலும், துன்பப்படுகின்ற- வர்களினதும் கிறிஸ்துவைக்க- ாண இந்த நற்கருணைப்பலி அவர்களுக்கு உதவி செய்கிறது. ஆகவே இந்த வீடு ஒரு மறை பரப்பு இல்லமாக மாறுகிறது

அதே போல தான் ஒவ் வொரு குடும்பமும் இந்த நற் கருணை ஆன்மீகத்திலே மூழ்கி, பங்கில் இருக்கின்ற சந்து பொந் துகளெல்லாம் சென்று அழகான இந்த நற்கருணை ஆன்மீ- கத்தைக் கொண்டு செல்ல வேண்டும், கொண்டு சென்று கொடுக்க வேண்டும்.

## இயேசு கற்பித்த...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

திருவிவிலியத்தில் உள்ள மதிப்பீடுகள் அனைத்தும் இந்த மன்றாட்டில் அடங்கியுள்ளன என்றும் எழுதியுள்ளார். யூபிலி 2025 தொடர்பாக 11.02.2022 அன்று எழுதிய மடலில் மறைந்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இயேசு கற்பித்த "விண்ணகத்திலுள்ள எங்கள் தந்தையே" என்னும் மன்றாட்டை நமது வாழ்வியல் திட்டமாக (Life Programme) மாற்ற வேண்டும் என்று அழைப்புவிடுத்துள்ளார்.

## இயேசுவும் ....

(5ம் பக்கத் தொடர்ச்சி)

பாலியல் குற்றத்தால் பாதிப்படைந்த சிறுவர்களுக்காக மன்னிப்புக் கேட்டார்.ஆடம்பரத்தைத் தவிர்த்து ஏழைகளுடன் தொடர்பு கொண்டு பொதுமக்களுடன் எளிதாகப் பழகிப் பணிவை வெளிப் படுத்தினார். நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டுத் தன் ஓட்டத்தை முடித்துக்கொண்ட நம் திருத்தந்தை உயிர்ப்பில் இயேசுவோடு இணைந்து தந்தையின் வலப்ப- க்கத்தில் அமர்ந்து நமக்காகப் பரிந்துபேசுவார் என்ற நம்பிக்கையோடு நாம் நம்மு டைய நம்பிக்கைப் பயணத் தைத் தொடர்வோம்.

## 21 ஆவது ஆண்டு நிறைவு

மலர்வு 12 . 06 . 1932



உதிர்வு 13 . 07 . 2004

**அருட்பணி அன்ரன் இராஜநாயகம்**

இறப்பின் நினைவில்
21 ஆண்டுகள் சென்றாலும்
இன்னும் உள்ளத்தில்
உன் வளர்ச்சி பாதையின் விதைகள்
முளைத்து விருச்சமாய
வளர்ந்து கொண்டே இருக்கின்றது

நீங்கா நினைவுகளுடன்
அருட்பணி எஸ்.ஏ.ஜோர்ஜ்

## விண்ணக வாழ்வில் 10ம் ஆண்டு நினைவு

மண்ணகம் 01 . 04 . 1929



விண்ணகம் 10 . 07 . 2015

**அமரர் சூசை யக்கோவா**

படைத்தவன் அடி சென்று 10 ஆண்டுகள் போனாலும் பத்திரமாய் வளர்த்த உம் அன்பு என்னை விட்டு நீங்காது இறைவனடி இருந்து எங்களுக்காய் வேண்டுவீர்

இளவாலை,
யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

## 41 ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில் 15 . 06 . 1988



இறைவன் அடியில் 16 . 05 . 2025

**அமரர் மகிபாலா ஜோண்றெஜீஸ்**

'இன்றே நீ என்னோடு வான்வீட்டில் இருப்பாய் என்று
உறுதியாக நான் உனக்கு சொல்லுகின்றேன்'
(லூக்கா 23:43)

என்றும் அன்புடன்
குடும்பத்தினர்

AD- 84

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில் 28 . 12 . 1950



இறைவன் அடியில் 05 . 06 . 2025

**அமரர் சிவக்கொழுந்து யோகம்**

'இன்றே நீ என்னோடு வான்வீட்டில் இருப்பாய் என்று
உறுதியாக நான் உனக்கு சொல்லுகின்றேன்'
(லூக்கா 23:43)

என்றும் அன்புடன்
குடும்பத்தினர்

AD- 85

## விண்ணக வாழ்வின் 1 ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 15 . 08 . 1931



இறப்பு 28 . 06 . 2024

**அமரர்**
**குருசுமுத்து மரியம்மா [பாக்கியம்]**

"வாழ்ந்தாலும் ஆண்டவருக்கென்றே வாழ்வின்றோம்
இறந்தாலும் ஆண்டவருக்கென்றே இறக்கின்றோம்"
(உரோ 14:8)

ஓர் ஆண்டு ஓடி மறைந்தாலும் - அம்மா
என்ற உறவு எம்மை விட்டு
என்றும் மறையாது
எங்கள் தாய் இறைவனிடம்
ஒன்றித்திருக்க
நாம் தினமும்
இறைவனிடம் வேண்டுகின்றோம் தாயே...

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

AD 83

## சுண்டுக்குளி புனித யுவானியார் ஆலய வருடாந்த திருவிழா



சுண்டுக்குளி புனித யுவானியார் ஆலய வருடாந்தத் திருவிழா பங்குத்தந்தை அருட்தந்தை சகாயநாயகம் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் கடந்த 24ஆம் திகதி நடைபெற்றது. 15ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆயத்தநாள் வழிபாடுகள் ஆரம்பமாகி 23ஆம் திகதி நற்கருணைவிழா இடம்பெற்றது. திருவிழாத் திருப்பலியை யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களும் நற்கருணைவிழா த்திருப்பலியை யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அவர்களும் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தனர். திருவிழா அன்று மாலை புனிதரின் திருச்சொரூபப் பவனியும் ஆசீர்வாதமும் இடம்பெற்றதுடன் இந்நிகழ்வில் இறைமக்கள் பக்தியுடன் பங்குபற்றியிருந்தனர்.

## மாதகல் புனித தோமையார் ஆலயத்திறப்பு விழா





மாதகல் புனித தோமையார் ஆலய புனரமைப்புப் பணிகள் நிறைவடைந்த நிலையில் அவ்வாலய திறப்புவிழா கடந்த 24ஆம் திகதி நடைபெற்றது. பங்குத்தந்தை அருட்தந்தை றோய் பேடினனட் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அவர்கள் கலந்து ஆலயத்தை ஆசீர்வதித்துத் திறந்து வைத்துத் திருப்பலியைத் தலைமைதாங்கி ஒப்புக் கொடுத்தார். இந்நிகழ்வில் குருக்கள், துறவிகள் பங்குமக்களெனப் பலரும் கலந்துகொண்டனர்.

## மாதகல் பங்கில் பிள்ளைகளுக்கான முதல்நன்மை அருட்சாதனம்



மாதகல் பங்கில் பிள்ளைகளுக்கான முதல்நன்மை அருட்சாதனம் வழங்கும் நிகழ்வு பங்குத்தந்தை அருட்தந்தை றோய் பேடினனட் அவர்களின் ஒழுங்கு படுத்தலில் 28ஆம் திகதி நடைபெற்றது. யாழ். புனித மரியன்னை பேராலய உதவிப் பங்குத்தந்தை அருட்தந்தை கமல்றாஜ் அவர்களின் தலைமையில் மாதகல் புனித தோமையார் ஆலயத்தில் நடைபெற்ற திருப்பலியில் 23 சிறார்கள் முதல்நன்மை அருட்சாதனத்தைப் பெற்றுக்கொண்டனர்.

## எழுவைதீவுப் பங்கில் பிள்ளைகளுக்கான முதல்நன்மை அருட்சாதனம்



எழுவைதீவுப் பங்கில் பிள்ளைகளுக்கான முதல்நன்மை அருட்சாதனம் வழங்கும் நிகழ்வு பங்குத்தந்தை அருட்தந்தை யூட் கமில்டன் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் கடந்த 21ஆம் திகதி நடைபெற்றது. அருட்தந்தை B. சதிஷ்குமார் அவர்களின் தலைமையில் புனித தோமையார் ஆலயத்தில் நடைபெற்ற திருப்பலியில் 09 சிறார்கள் முதல்நன்மை அருட்சாதனத்தை பெற்றுக்கொண்டனர்.

## சாட்டி வெண்புரவிநகர் புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா



சாட்டி பங்கின் துணை ஆலயமான வெண்புரவிநகர் புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா பங்குத்தந்தை அருட்தந்தை பாஸ்கரன் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் கடந்த 28ஆம் திகதி நடைபெற்றது. கடந்த 19ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆயத்தநாள் வழிபாடுகள் ஆரம்பமாகி 27ஆம் திகதி நற்கருணைவிழா இடம்பெற்றது. திருவிழா திருப்பலியை யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அவர்களும் நற்கருணைவிழாத் திருப்பலியை யாழ். கொழும்புத்துறை புனித பிரான்சிஸ் சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரி அதிபர் அருட்தந்தை தயாபரன் அவர்களும் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தனர்.

## ஜெயபுரம் புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா





முழங்காவில் ஜெயபுரம் புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா பங்குத்தந்தை அருட்தந்தை அன்ரனிபாலா அவர்களின் ஒழுங்குபடுத்தலில் கடந்த 28ஆம் திகதி நடைபெற்றது. 24ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆயத்தநாள் வழிபாடுகள் ஆரம்ப மாகி 27ஆம் திகதி நற்கருணைவிழா இடம் பெற்றது. திருவிழாத் திருப்பலியை இளவாலை புனித யாகப்பார் ஆலய பங்குத்தந்தை அருட்தந்தை சில்வெஸ்ரர்தாஸ் அவர்களும் நற்கருணைவிழா திருப்பலியை அமல மரித்தியாகிகள் சபை அருட்தந்தை இம்மானுவேல் அவர்களும் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தனர்.

அத்துடன் முழங்காவில் பங்கிற்குட்பட்ட பல்லவராயன்கட்டு 19ஆம் கட்டை அந்தோனியார் ஆலய திருவிழாவும் கடந்த 21ஆம் திகதி நடைபெற்றது. 7ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆயத்தநாள் வழிபாடுகள் ஆரம்பமாகி 20ஆம் திகதி நற்கருணைவிழா இடம்பெற்றது. திருவிழாத் திருப்பலியை இரணை மாதாநகர் பங்குத்தந்தை அருட்தந்தை தயதீபன் அவர்களும் நற்கருணைவிழாத் திருப்பலியை அமலமரித்தியாகிகள் சபை அருட்தந்தை வின்சன்ட் அவர்களும் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தனர்.

## நாரந்தனை பங்கில் பிள்ளைகளுக்கான முதல்நன்மை அருட்சாதனம்



நாரந்தனை பங்கில் பிள்ளைகளுக்கான முதல்நன்மை அருட்சாதனம் வழங்கும் நிகழ்வு பங்குத்தந்தை அருட்தந்தை அன்ரனிப்பிள்ளை அவர்களின் ஒழுங்குபடுத்தலில் கடந்த 22ஆம் திகதி நடைபெற்றது. யாழ். மறைமாவட்ட மறைக்கல்வி நிலைய இயக்குனர் அருட்தந்தை டியூக் வின்சன்ட் அவர்களின் தலைமையில் புனித பேதுரு பவுல் ஆலயத்தில் நடைபெற்ற திருப்பலியில் 20 சிறார்கள் முதல்நன்மை அருட்சாதனத்தை பெற்றுக்கொண்டனர்.

## எழுவைதீவுப் பங்கில் நற்கருணைப் பெருவிழா



எழுவைதீவு புனித தோமையார் ஆலயத்தில் கடந்த 22.06.2025 அன்று இயேசுவின் திரு உடல் திருஇரத்தப் பெருவிழாவைச் சிறப்பிக்கும் முகமாக நற்கருணைப் பேரணி ஒன்று எழுவைதீவுக் கிராமத்தைச் சுற்றி நடைபெற்றது. இவ் வழிபாட்டை அருட்தந்தையர்களான அருட்பணி ஏ.ஜே.அன்ரனி ஜெயரஞ்சன் மற்றும் அருட்பணி ஏ.மைக்டொனால்ட் அடிகளார் வழிநடத்தினர்.

## நினைவழியா நினைவுகளுடன்

### விண்ணக வாழ்வின் மூஐந்து ஆண்டுகள் நிறைவு

"இன்றே நீ என்னோடு வான்வீட்டில் இருப்பாய் என்று உறுதியாக நான் உனக்குச் சொல்கின்றேன்"

மண்ணில் 04 . 09 . 1939



விண்ணில் 10 . 07 . 2010

**அமரர். அருட்சகோதரி மேரி லூயிஸ் அந்தோனிப்பிள்ளை (தி.கு.க)**

இறைபணியில் 18. 06. 1963

ஆண்டுகள் பல கடந்திடினும் ஆறிடுமோ எம் நெஞ்சங்கள்
தாயின் கருவில் உருவாகு முன்னரே
தேவன் பெயர் சொல்லி அழைத்த சோதரியே
எங்கள் இதயத்தில் எழுந்திருக்கும் கோயிலில் நீர்
என்றும் இருப்பீர் அம்மா! ஏதும் இதில் மாற்றமில்லை

இவரின் ஆன்மா நித்தியமும் இறைவனில் இளைப்பாற வேண்டி 04.07.2025 காலை 6.00 மணிக்கு பரிசுத்த கார்மேல் மாதா ஆலயத்திலும், 10.07.2025 காலை 5.45 மணிக்கு புனித மரியன்னை பேராலயத்திலும் இரங்கல் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும்.

பிரிவு அகலா உறவுகள்

தாயகம்
42/5 மவுண்கார்மேல் வீதி, யாழ்ப்பாணம்.

## நினைவழியா நினைவுகளுடன்

### விண்ணக வாழ்வின் 31ம் நாள் நினைவுத் திருப்பலி

"ஆண்டவரே உம்மைக் காக்கிறார்: அவர் உமக்கு வலப்பக்கத்தில் உள்ளார்: அவரே உமக்கு நிழல் ஆவார் "(திருப்பாடல் 121:5)

மண்ணில் 15 . 10 . 1939



விண்ணில் 09 . 06 . 2025

அமரர்
**அந்தோனிப்பெர்ணாந்து இமல்டாறோஸ்(திலகம்)**

கடந்த 09.06.2025 அன்று இறைபதமடைந்த அ.இமல்டாறோஸின் ஆத்ம இளைப்பாற்றிக்காக யாழ்ப்பாணம் புனித மரியன்னை பேரலாயத்தில் எதிர்வரும் ஆடிமாதம் 9ம் திகதி புதன்கிழமை மு.ப 11.00 மணிக்கு ஒப்புக் கொடுக்கப்படும் இரங்கல் திருப்பலியில் பங்கு பற்றி அன்னாரின் ஆத்ம இளைப்பாற்றிக்காக செபிப்பதுடன் அதனைத் தொடர்ந்து இல:11, அச்சுக்கூட வீதி யாழ்ப்பாணத்திலுள்ள எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசன விருந்திலும் கலந்து கொள்ளுமாறு பணிவன்புடன் அழைக்கின்றோம்.

இவரின் இழப்பினால் தவித்திருந்த வேளையில் நேரடியாக வந்தும் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டும் எம் துயரில் பங்கெடுத்த அருட்பணியாளர்கள், துறவிகள், அருட்சகோதரிகள் மற்றும் மருத்துவ நலன்களை கவனித்த வைத்தியர்கள், தாதிகள், எனைய ஊழியர்களிற்கும் தொலைபேசியினுடாகவும், சமூக வலைத் தளங்கள் மற்றும் மலர் வளையங்கள் ஊடாகவும் வெளிநாடுகளிலிருந்தும் எம் துயரைப் பகிர்ந்து கொண்ட அனைத்து உறவுகள், நண்பர்கள் அத்துடன் எனைய வழிகளில் உதவிகளைப் புரிந்த அனைவரிற்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவிக்கின்றோம்.

குடும்பத்தினர்

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2025ம் ஆண்டு ஆனி மாதம் 29ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.